ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 1. | சென்னை : அக்ஷய ஞூ ஆடிமீ 1உ | இதழ் - 4. |
| Vol. 1 | 1926-ம் ஞூ ஜூலைமீ 16உ | No. 4 |


## ஆநந்த தரிசனம்

" ஸர்வேந்திரியாணும் நயநம் பிரதானம் " என்ற வாக்கியப்படி சரீர உறுப்புகள் எல்லாவற்றிலும் நேத்திரமே பிரதானமாயிருப்ப தால், அதைக் காப்பாற்றுவதற்காகப் பகவான் இமையை சிருஷ்டித் திருக்கிறார். அதனாலே தான் " கண்ணை இமை காப்பதுபோல் " என்ற பழமொழி வழங்குகிறது. ஒருவர் மீதுள்ள பிரியத்தால் அவரைக் கண்ணுக்குச் சமானமென்று சொல்வதுண்டு. குழந்தை களைக் கண்ணே யென்றும், கண்மணியே யென்றும் கூப்பிடுவது பிரீதியாலேயாம். ஜகதம்பிகைக்கு மீனாக்ஷி, காமாக்ஷி, விசாலாக்ஷி யென்ற பெயர்கள் ஏற்பட்டதற்குக் காரணமென்ன ? அவ்வம்பி கையின் கருணையை யுணர்த்துவதற்கேயன்றோ ? மீனாக்ஷி என்றால் மீன் போன்ற கண்ணையுடையவள் என்று அர்த்தம். ஆற்றில் தாய் மீன் முன்னால் போய்க்கொண்டிருக்கும்போது அநேக குட்டி மீன்கள் பின்னால் தொடர்ந்து செல்லும். அப்போது தாய் மீன் ஒரு தரம் அச்சிறு மீன்களைத் திரும்பிப் பார்த்தால் தக்ஷணமே அக்குட்டி மீன்களுடைய பசி யடங்கிப்போம். இது உண்மையான

விஷயம். இதைப்போலவே அம்பிகையின் கடாக்ஷம் பக்தர்கள் மீது படிந்தால் தக்ஷணமே அவர்கள் சகல பாபங்களினின்றும் விடுபட்டவர்களாகி எல்லா பாக்கியங்களையும் பெறுகின்றனர். ஸர்வ இச்சைகளையும் நிறைவேற்றித்தரும் நயனி யாதலின், அதாவது திருவருட் கண்களையுடையவராதலின், உமாதேவிக்குக் காமாக்ஷி என்ற பெயர் வழங்குகிறது. உலகத்திலுள்ள ஸமஸ்த பிராணிகளும் காசி க்ஷேத்திரத்தை யடைந்து கங்கையில் ஸ்நாநம் செய்து தன்னைத் தரிசிக்க வருகிறார்களென்ற பரம கருணையால் அவர்களைப் பூர்ண ஆதரவோடு பார்க்கவேண்டி நீண்டு அகன்ற விசாலமான நேத்திரங்களுடன் எழுந்தருளி யிருக்கும் பரமேசுவரிக்கு விசாலாக்ஷி யென்ற பெயருண்டாயிற்று. ஆதலின் ஸர்வலோக சரண்யையாகிய ஜகதீச்வரியை ஸதா தியானிக்கக் கடவோம்.

***

"ஈசனை நேசி" என்று மகான்கள் கூறியிருக்கின்றனர். ஈசனுடைய விசுவாசமுண்டானால் இகலோகத்தில் ஸகல போக பாக்யங்களும் அனுபவித்துப் பரலோக ஸாம்பிராஜ்யத்தையு மடையலாம். எவன் தரித்திரனோ அவன் ஜென்மாந்திரத்தில் தான் பகவத் பூஜை செய்ய வில்லையென்று தன்னையே நொந்துகொள்வான். இப்படியே, பசு, பத்நி, புத்திரன், மித்திரன் முதலியவர்களைத் தனக்கு அநுகூலமாக வாய்க்கப் பெறாதவன் தனக்கு பகவத் கிருபை யில்லையென்று சொல்லிக்கொள்வதை நாம் எத்தனை முறை கேட்டிருக்கிறோம்? ஆகவே, இந்த ஜென்மத்தில் நாம் அடையும் சுகங்களெல்லாம் ஈசனுடைய கடாக்ஷத்தால் கிடைத்தனவென்று நம்பி அவரை ஸதா பிரார்த்தனை செய்ய வேண்டும்.

***

"இனிமை ஒன்றே" ஆயினும் அவ்வினிமையைக் கொடுக்கும் வஸ்துக்கள் பல. உதாரணமாக, செவிக்கு இன்பம் தரும் வாத்தியங்களைப் பார்ப்போம். வீணை வெகு சிலாக்கியமானது. அதன் த்வனி காதுக்கு மஹத்தான இன்பத்தைக் கொடுக்கும். அதை வாசிக்கக் கற்றுக்கொள்வது எளிதல்ல. அநேக வருஷங்கள் வீணையை அப்யஸித்தாலன்றி நன்றாய் வாசிக்க முடியாது. பிட்டிலும் சிறந்த வாத்யமே. அதிலிருந்து உண்டாகும் சப்தமும் செவிக்கு இனிமையைத் தருகிறது. சிலர் பிடில் அப்யாஸம் செய்கிறார்கள். பம்பாய் வாசிகள் 'சித்தார்' வாசிக்கின்றனர். அதன் த்வனி அவர்கட்கு ஆநந்தகரம். மற்றும் சிலர் நாகஸ்வரம் வாசித்தால் தலையை யாட்டி ஸந்தோஷப்படுகின்றனர். சிலருக்கு ஹார்மோனியத்தின் த்வனி வெகு பிரீதிகரம். வேறு சிலர் மிருதங்கம் வாசித்தால் அதைக் கேட்க ஓடுவர். சிலருக்கு முகவீணையின் ஓசை ரம்யமாயிருக்கிறது. அதிக ஞானமும் நாகரீகமும் இல்லாத பஞ்சமர்கட்குப் பறையின் ஓசையே சுககரம். இப்படி உலகத்தில்

இடம், பொருள், காலம் முதலியவற்றுக்கேற்ப பற்பல வாத்தியங்கள் இனிமையைத் தந்து கொண்டிருப்பதால், எதுதான் நிரந்தரமான இன்பத்தைத் தருகிறதென்று ஒரு கேள்வி கேட்கத் தகுமோ? அவரவர்களின் நிலைமைக்குத் தக்கபடி இன்பம் ஏற்படுகிறது. இதுபோல்,

***

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று ஆங்காங்கு பல மதஸ்தாபகர்கள் தாங்கள் அநுபவித்தறிந்த உண்மைகளை விளக்கி, ஈசுவரனுடைய கடாக்ஷத்தை யடைய வேண்டி நாநாவித கிரந்தங்களை எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள். அதற்கேற்ப, உலகத்தில் தேவதாராதனமும் பல விதமாயிருக்கின்றது. சிலர் மண், கல், மரம் முதலியவற்றைத் தெய்வமாகப் பாவித்து வணங்குகிறார்கள். சிலர் சூர்ய சந்திர கிரகங்களையும், விருக்ஷம், நதி, மலை முதலிய அநேக வஸ்துக்களையும் பூஜிக்கிறார்கள். பின்னும் சிலர் மரணமடைந்த முன்னோர்களையும், பரோபகாரம் புரிந்து புண்யாத்மாவென்று பெயரெடுத்தவர்களையும், வேறு பல தேவதைகளையும் ஸ்தோத்திர பூஜையால் ஆராதிக்கின்றனர். சிலர் ஆகாசத்தை நோக்கிப் பகவானைத் தியானிக்கிறார்கள். ஒவ்வொரு மதஸ்தரும் தங்களின் ஸம்பிரதாயமே சிறந்ததென்றும், அதை ஆராதித்தால் மட்டும் ஸ்வர்க்கப் பிராப்தி யுண்டாகுமென்றும், அன்னிய மதத்தைத் தழுவினவர்களுக்கு நரகமே லபிக்குமென்றும் கூறுவர். இத்தனை மதங்கள் உண்டாவானேன்? இத்தனை மாறுபாடான கொள்கைகள் இருப்பானேன்? எனிலோ,

***

"உலகம் பல விதம்" என்பதைக் கேட்டதில்லையா? அந்தந்தக் காலத்தில் உண்டான மகாத்மாக்கள் அவ்வவ்விடத்தில் அப்போது வஸித்த ஜனங்களின் புத்தி நிலைமைக்குத் தக்கபடி கிரந்தங்களை எழுதி அவற்றிலுள்ள விதிப்படி நடக்க வேண்டுமென்று சட்டமிட்டனர். அதற்கேற்பப் பிரஜைகளும் பற்பல மதஸ்தர்களாகப் பிரிந்து பகவானுடைய கருணையை யடைய முயல்கிறார்கள். எம்மதத்தில் இருப்பவராயினும் சரி, நம்பினவர் நலமடைவர். நம்பாதவர்களுக்கோ ஸதா காலமும் ஸந்தேகங்கள் தோன்றி, உள்ள தெய்வபக்தியும் இல்லாமற் போய்விடும். தங்களுக்கு உண்டான ஸம்சயங்களுக்குத் தாங்களே தர்க்கித்துக் கொள்ளாமல் பெரியோர்களிடம் கேட்டறிந்து நிவர்த்தி பெற வேண்டும்.

***

"தேக சுத்தம் என்றும் சிலாக்கியம்" சுத்தம் சோறு போடுமென்பது பழமொழி. வீடு, வஸ்திரம், தேகம், மனம் இவற்றை சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டிய அவசிய மென்னவெனில், சுத்தத்தால் ஒருவித மனோத்ஸாக முண்டாகிறதே தகுந்த காரணமென்போம். சுத்தத்தோடும் இருந்து தெய்வ ஸ்தோத்திரம்

செய்வதால் மனதுக்கு ஆநந்தமுண்டாகின்றது. பிறருக்கு ஹிம்ஸை யற்றதும், ஸத்வ குணத்தை விருத்திசெய்யக் கூடியதும், நிரந்தர மான ஸந்தோஷத்தைத் தரக்கூடியதும் பகவத் பக்தியே யாதலின், அதற்காகக் காலத்தைச் செலவிடாதவன் கசடனே.

***

"நாடகத்தில் ஸ்திரீ வேஷம்" தரித்து நடனமாடுவோன் சிறிது நேரம்வரை தான் புருஷ ரூபம் என்பதை மறந்திருக்கின் றான். நாடகம் முடிந்தவுடன் தன் ஸ்வரூபம் நினைவுக்கு வரு கிறது. இவ்விதமே இராஜ வேடம் தரித்து ஸிம்ஹாஸனத்தில் உட்காருவோன் நாடகம் முடியுமளவும்தான் ராஜாவல்ல, சாமான்ய மனிதன் என்ற ஞானம் கொள்வதில்லை. இதைப்போல் அநேக ஜன்மங்க ளெடுத்து ஸம்சார துக்கத்தில் அடிபடும் ஜீவன், தான் பிரம்மமென்று அறிந்துகொள்வது அருமையே. பிரமை யென் பது எல்லோருடைய மனதையும் மூடுகிறது. பகவத் கடாக்ஷத் தால் பக்குவம் உண்டாகும் காலத்தில் உண்மையை யறிந்து தெளிந்த உள்ளமுடையவனாகி அனைத்தையும் உதறிவிட்டு ஞானி யாகிறான்.

***

"இனத்து இயல்பதாகும் அறிவு" என்பதுபோல், இணங்கும் இனத்துக்கேற்பக் குணங்களும் உண்டாகும். நிலத்தின் இயல்புக் கேற்ப நீரின் நிறமும் மாறும். அநாகரீகர்களுடைய மனையிற் புகுந்தால் குப்பை குவிந்துகிடக்கும். ஓரிடத்தில் மட்பாண்டங் கள் மசிபிடித்து நிறைந்திருக்கும். இன்னொரு இடத்தில் கிழிந்த இலைகள் எடுப்பாரின்றிக் கிடக்கும். வேறொரு இடத்தில் அஸங்கி யம் வீசும். உடனுக்குடன் குப்பை கூளங்களை வாரி யெறிய வேண்டுமென்ற ஞானம் அநாகரீகர்க்கு உண்டாகாது. இதைப் போல் ஸகவாச தோஷத்தால் அவிவேகிகள் தங்களுடைய ஹிரு தயமாகிய வீட்டைப் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளாமல் சூது, வஞ்சகம், பொறாமை, அகங்காரம் முதலிய குப்பை கூளங்களை நிறைத்து வைப்பர். ஒரு ஸமயம் பிறர் பொருளைக் கண்டு ஆசை யுண்டானாலும், அதை விவேகிகள் உடனே மனதினின்று விரட்டி விடுவர். ஸகவாச தோஷத்தினால் கெட்ட அவிவேகிகளோ அவ் விதம் செய்யாமல் மேன்மேலும் ஹிருதயத்தை அசுத்தப்படுத்திக் கொள்வர். இவர்கள் திருந்துவது எந்த நாளிலோ!

***

"முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுவம்." நாமாகச் செய்யும் புதியதொன்றுக்கு அத்தனை மகிமையில்லை. நாமாக அமைக்கும் புதிய தேவாலயத்தைவிட, பூர்வ நிகழ்ச்சிக ளுடன் சம்பந்தப்பட்டுப் பூர்வ காலத்தில் நிர்மிதமான கோயில் களுக்கு விசேஷித்த பிரபாவம் உண்டன்றோ? அவ்விதமே முன்

ஞோர்கள் இயற்றிய கவிதைகள், ஸ்லோகங்கள் முதலியவற்றைப் போல் நாம் இப்பொழுது புனையத் தொடங்கினலும் முன்னதற்கே பெருமை அதிகம். "ஆத்திச்சூடி" என்று இக்காலத்தில் இரண்டொருவர் நூதனமாய் இயற்றி யிருப்பினும், ஔவையாரின் ஆத்திச்சூடிக்குள்ள கௌரவம் இப் புதியவைகட்கு வருமோ? மகாத்மாவும் இதை யொட்டிப் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—
"பரம்பரையாக தெய்வ ஸ்தோத்திரங்களுக்கென்று ஏற்பட்ட ஸ்லோகங்களைச் சொல்லித் தியானிப்பதால் ஏற்படக் கூடிய உணர்ச்சி, தாய்ப் பாஷையில் அவற்றை மொழிபெயர்த்துச் சொல்வதால் ஏற்படாது. காயத்ரி மந்திரத்தை அப்படியே உச்சரிப்பதுதான் சிலாக்கியம். குஜராத்தி பாஷையில் அதை மொழி பெயர்த்துச் சொன்னல் ரஸமாயிராது. கடவுளே என்று நாம் தெய்வத்தை ஸ்தோத்தரிப்பதற்கும், ராம நாமத்தை ஜபிப்பதற்கும் வித்தியாஸமுண்டு. ராம நாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் கோடிக் கணக்கான ஹிந்துக்களுக்கு ஓர் எழுச்சி யுண்டாகிறது. வெகு காலமாக ஸ்தோத்திரார்ஹமாய் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிற ஒரு பதத்திற்கும் புதிதாக உண்டு பண்ணும் பதத்திற்கும் சக்தியில் வித்தியாஸமுண்டு. ஆகையால் மந்திரங்கள், ஸ்தோத்திரப் பாடல்கள் முதலியவற்றை சமஸ்கிருதத்தில் சொல்லுவதே நல்லது. ஆனல், அர்த்தம் தெரிந்து ஜபிக்கவேண்டியது அவசியம்."

***

"கன்னன்உலை நீருங் கள்ளுமேனக் கோக்கும்" என்றதை இங்கு விளக்குவோம். அநேகம் ஆயிரம் ஜனங்களைச் சீடராக வுடைய ஒரு மஹான் இருந்தார். அவரோ துறவி. அவரை யடைந்த சீடர்களிலும் பெருபாலார் துறவிகளே. இக்குருபரன் உலகபோகாதிகளை மறந்து காணுமனைத்தையும் சிவரூபமாக அனுபவிப்பார். இதனல் இவர் எதையும் புசிப்பார். எவ்வண்ணமேனும் இருப்பார். இவரது இவ்வாறான செயல்களைக் கண்ட இவர் மாணவர்களிலும் பெரும்பாலார் இவரைப்போல் உண்டி யாதியவைகளைக் கொண்டவர்களா யிருந்தார்கள். இவர்களின் அதிக்கிரமச் செயல்களைச் சிவானந்தமேலீட்டினல் அப்பெரியவர் கண்டாரில்லை. ஒரு தினம் இவர் செல்லும் வழியில் பனங்கள் விற்குமொருவன் நிற்கக் கண்டு, அவனிடம் என் சரீர தாகம் ஆற்றுவையோவென, அவன் பனங்கள்ளையே அம்மகானுக்கு ஒரு பனையோலைப் பட்டையில் அளித்தானும். அவர் அதை ருசி பாராது சிவரூபமாக வுண்டு செல்வாராயினர். உடனே அவர் சீடர்கள் இனி நாமும் கட் குடிக்கலாம் என்று துணிந்து கள்ளருந்துவாராயினர். சீடர்களின் செயலை இப்போதுதான் மகான் உணர்ந்தார். உடனே அம்மஹான் அவ்வழியில் ஒரு கன்னன் உலையில் வெங்கலம் உருக்குவதைக்

கண்டு, முன் கள் விற்பவனைக் கேட்டதுபோலக் கேட்டனர். உடனே அக்கன்னான் உலையிற் காய்ந்த அந்த வெங்கல முருகிய நீரைக் காட்டி இதுதான் உளது என்றான். அவர் ஆனால் அதனையே விடு என்றார். மூடனாகிய கன்னான் அவ்வெங்கல நீரையே விட்டான்; நன்னீர்போல் அவர் அதைக் குடித்தனர். இச் செயலைக் கண்டு, ஐயோ இதென்ன ஆச்சரியமென்று சீடர்கள் மயங்கி நின்றார்கள். குருவும் அவர்களைப் பார்த்து ஏன் குடிக்கலாமே யென்றார். எவரும் குடித்தாரில்லை. உடனே சிஷ்யர்களை நோக்கிக் கெட்டதைவிட்டு நல்ல ஆசாரத்தைக் கைப்பற்றினால் உய்வீர் என்றார். இதனால் சித்தம் போக்குச் சிவன்போக்கு என்றது முற்றுந்துறந்த பெரியோருக்கே யென்றும், மற்றவர்கள் மனத்தைக் கண்டபடி விடாமல் அவர்களுடைய இஷ்ட தெய்வரூபத் தியானங்களில் அடக்கி நடந்துகொள்ள வேண்டுமென்றும் அறிந்து கொள்கிறோம்.

***

"அணுக்களின் கூட்டமே மகாமேரு பர்வதம்." அதுபோல் நமது "ஆநந்த குண போதினி" ப் பத்திரிகைக்காக ஏற்பட்டுள்ள ஒவ்வொரு சந்தாதாரரின் அபிமானமும் ஒன்று சேர்ந்து பலதுளி பெருவெள்ளமாகிப் பெருமையை விளக்கிறது. இதன் உயர்வை இன்னும் விருத்தி படுத்தவேண்டி உத்தம குணமுடைய இப் பத்திரிகையின் சந்தாதார்கள் கொஞ்சம் சிரமப்பட்டு இதற்கு வேண்டிய உதவி செய்யும்படி கோருகிறோம். அதாவது, ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு முயற்சி செய்து ஒரு புதிய சந்தாதாரரையேனும் சேர்க்கவேண்டும். இவ்வேண்டுகோளை ஏற்கனவே அங்கீகரித்து உபகாரம் செய்துள்ள அன்பர்களிடம் மிகுந்த நன்றி பாராட்டுகிறோம்.

***

"மகாத்மா கூறுகிறார்":—"பிரார்த்தனை யென்றால், பயபக்தியுடன் பகவானை நோக்கி ஏதாவது கேட்பதென்று அர்த்தம். ஆனால், பக்தியோடு கூடிய எந்தக் காரியத்துக்கும் அப்பெயர் சாதாரணமாக உபயோகப்படுத்தப் படுகிறது." ***"ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் நியாயமாக நடந்துகொள்ள நமக்குப் புத்தி தரவேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திப்பதுதான் மேலான பிரார்த்தனை யென்றுநான் சொல்லவும் வேண்டுமோ?

ஆநந்த குண போதினி

அக்ஷய௵ ஆடிமீ 1௳

# முதல் இரண்டு தலைமுறைகளின் தேச சேவை.

எந்தத் தேசமும் தன்னில் தானே விழிப்புநிலை பெற்றுத் தனது இடைவிடாத முயற்சியினாலும், சலியாத போராட்டத்தினாலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறதே யன்றி, பிறரை நம்பி எதிர்பார்த்துப் பிறரால் முன்னுக்கு வந்த நாடு உலக சரித்திரத்தில் எதுவுமில்லை. லார்ட் ரிப்பன் பிரபு இந்தியாவின் ராஜப் பிரதிநிதியாய் விளங்கிய காலத்தில்தான் இந்தியாவுக்கு முதன் முதலாகப் பிரக்ஞை யுண்டாயிற் றென்னலாம். அப்பொழுது தோன்றிய உயர்நலஞ் சார்ந்த சிந்தனைகளின் பயனாக 1885-ம் வருஷத்தில் பம்பாய் நகரத்தில் முதலாவது காங்கிரஸ் மகா சபை கூடிற்று. இந்தியாவில் நாநா திசைகளிலுமிருந்த பெரியோர்கள் அனைவரும் வந்திருந்து மகா சபையை அலங்கரித்தனர். எவ்விதக் கக்ஷி பேதமுமில்லை. பரஸ்பரத் துவேஷமுமில்லை. அனைவரும் ஏகோபித்த மனத்தினராயிருந்து தேச முற்போக்குக்கானத் தீர்மானங்களை நிறைவேற்றினர். யாவும் ஸம்பூர்ணமான பின்பு அத் தீர்மானங்களை அரசாங்கத்தினருக்கு ஸமர்ப்பிப்பாராயினர். இவ்விதம் பிரதி வருடமும் காங்கிரஸ் மகா சபையைக் கூட்டித் தீர்மானங்களைச் செய்து அவற்றைத் துரைத்தனத்தாருக்கு அனுப்பி விண்ணப்பித்துக் கொள்வது முதலாவது தலைமுறையினரின் கொள்கையாக இருந்து வந்தது. இந்தியாவின் கோரிக்கைகளை ஆங்கிலேயர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டாக லண்டன்மா நகரில் "இந்தியா" என்ற ஆங்கிலப் பத்திரிகை யொன்றையும் காங்கிரஸ் மகா சபையின் செலவில் நடத்திவந்தனர். அக்காலத்தில் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி, ஸ்ரீ மகாதேவ கோவிந்தரானடே, ஸ்ரீ பத்ருடீன் டயாப்ஜி, ஸ்ரீ திலகர், ஸ்ரீ சந்திரவர்க்கர், ஸ்ரீ பெரோஜ் ஷா—எம்—மேதா, ஸ்ரீ லஜபதிராய், ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜி, ஸ்ரீ ஜீ. சுப்பிரமண்ய ஐயர் (சுதேசமித்திரன் ஆசிரியர்) ஸ்ரீ மு. வீரராகவாச்சாரியார் ("ஹிந்து"வின் ஆசிரியர்) ஸ்ரீ கோக்கலே முதலிய பெரியோர்கள் தேசத்தின் தலைமையை வகித்து வந்தனர்.

இவ்வாறு நெடுங்காலம் நடந்துவந்த பின்னர், இராஜப் பிரதிநிதியாக அமர்ந்த லார்ட் கர்ஸன் பிரபுவின் ஆட்சியில் 1904-ம் வருஷத்தில் இந்தியாவில் ஒரு பெருங் கிளர்ச்சி உதயமாயிற்று. அதன்

பயனுகத் தேசத்தில் புதிய-கட்சி, பழய-கட்சி என்று இருவகைப் பிரிவுகள் எழுந்தன. புதிய கட்சியின் தலைவர் ஸ்ரீ திலக ராவர். காங்கிரஸ் தலைவர்களிற் பெரும்பான்மையோர் பழய கட்சியிலேயே நின்றனர். சிலர் இருவகைக் கக்ஷியிலும் கால் வைத்துக் கொண்டு தடுமாறினர். காங்கிரஸ் மகா சபைக்கு எந்தக் கக்ஷியிலிருந்து அக்கிராஸனரைத் தெரிந்தெடுப்ப தென்று தவித்தனர். இவ்வித நிலையில் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி காங்கிரஸின் தலைமையை வகித்து ஸ்வராஜ்யமே இந்தியாவின் மீட்சி என்று ஞானோபதேசம் செய்வதானுர். அது முதல் ஸ்வராஜ்ய தாகம் தோன்றலானது. ஸ்ரீ திலகரின் புதிய கட்சி தேசமெங்கும் பரவிற்று. சுதேசியம், வர்ஜனம், ஸ்வராஜ்யம் முதலிய பெயர்கள் எவர் வாக்கிலும் வழங்கின.

இங்ஙனமாக, முதலாவது தலைமுறையார் தாங்கள் தொடங்கிய தேச ஊழியத்தை ஸ்வாராஜ்ய லக்ஷ்யத்துடன் முடிவு செய்தனர். ஸ்ரீ திலகரின் காலத்தோடு அந்த முதல் தலைமுறையின் தேச சேவை பூர்த்தி பெறுகிறதென்னலாம். அதற்கு அடுத்த தலைமுறையின் தேச கைங்கரியம் மகாத்மா காந்தியினுல் ஆரம்பம் செய்யப் பெற்றது. ஒத்துழையாமை, கதர் தரித்தல், அஹிம்ஸா தர்மம், ஹிந்து முஸ்லிம் ஐக்கியம் முதலிய லக்ஷ்யங்களைப் பரவச்செய்து, காங்கிரஸ் மகா சபை தனது நோக்கங்களை அரசாங்கத்தினருக்குத் தடவை தோறும் விண்ணப்பித்து வந்த முறையை மாற்றி மகா ஜனங்களுக்கு விக்ஞாபனம் செய்து கொள்ளும்படி திருத்தினுர். லண்டனில் நடந்து வந்த "இந்தியா" பத்திரிகை இந்த இரண்டாவது தலைமுறையின் தலைவரால் நிறுத்தப்பட்டுவிட்டது. தேச மகா ஜனங்கள் தங்களுக்குள்ளாகவே பிரசாரம் செய்து கொண்டு மேலோங்க வேண்டுமென்ற கொள்கையையும் தோற்றுவித்தார். தேசமெங்கும் காந்தியின் மணம் கமழ்ந்தது. கதர் எங்கும் வியாபகமாயிற்று. இந்த இரண்டாவது தலை முறையின் ஆரம்பமுழக்கம் உலகமெங்கும் கேட்டது. ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம் வெகு ஆழமாய் வேரூன்றிற்று. மகாத்மாவைச் சுற்றி இரண்டு முஸ்லிம் சிங்கங்கள் இருந்துகொண்டு அவரது ஆக்ஞைக்கு எதிர் நோக்குகின்றன.

இவ்வித நிலையில் மகாத்மா சிலகாலம் அக்ஞாதவாசம் செய்ய நேரிட, அப்பொழுது தேசபந்து சித்தரஞ்சனதாஸ் அவரது பிரதிநிதியாகத் தோன்றி சட்டசபைக்குச் சென்று கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற கொள்கையைப் பரப்பி, ஸ்வராஜ்யக் கக்ஷியை ஸ்தாபித்தார். இதன் மத்தியில் மகாத்மாவும் தமது அக்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு திரும்பினுர். தேசம் இருக்கும் நிலையை உற்று நோக்கித் துயரத்தில் ஆழ்ந்தார். காலத்தை யநுஸரிக்கும் நோக்கத்துடன் சட்டசபைப் பிரவேஸத்தையும் ஆதரித்தார். இப்பொழுது சட்டசபைப் பிரவேஸமே எங்கும்

பெரு முழக்கமாய் இருந்து வருகின்றது. மகாத்மா வெகு சிரமப் பட்டு ஸ்தாபித்த ஹிந்து முஸ்லிம் ஐக்கியம் சிதறிப்போயிற்று. ஒத்துழையாமையும் மறைந்தது. அஹிம்ஸா தர்மம் இன்னும் சரியாக வேரூன்றவில்லை. கதர் இயக்கம் மட்டும் விசாலித்து வருகின்றது. மகாத்மாவும் களைத்துப்போய், இனி வரும் மூன்றாவது தலைமுறையாருக்கு உதவியாகவும், அவர்களின் பரிணமிப்புக்குத் தூண்டுதலாகவும் இருக்குமாறு தமது ஜீவிய சரித்திரத்தை எழுதத் தொடங்கி, அந்த வேலையில் அமர்ந்துவிட்டார்.

முதல் தலைமுறையின் துவக்கத்தில் எவ்விதக் கக்ஷி பேதங் களும் இருக்கவில்லை. அதன் அந்தியத்தில் பழய கட்சி, புதிய கட்சி என்று இரு பிரிவுகள் தோன்றின. இரண்டாவது தலை முறை யின் ஆரம்பத்தில் தேசத்தை ஒரு பரீக்ஷை பார்ப்பதுபோல் காரி யங்கள் செய்யப்பட்டன. அப்பரீக்ஷைகளுக்குப் பிறகு பலவித கக்ஷிகள் தோன்றியிருக்கின்றன. பரஸ்பரம் அபிப்பிராய பேதங் களும் அதிகப்பட்டு விட்டன. ஒருவர்மீதொருவர் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றுகின்றனர். கடைசியாகச் சொல்லு மிடத்து, இரண்டாவது தலைமுறையின் முடிவு அனைவரையும் விழிப் புள்ளவர்களாகச் செய்துவிடுமென்று காண்கிறது. அதுவே இந்த இரண்டாவது தலைமுறையின் அந்தியம் செய்யும் பெரிய வேலை. இது வெகு கிளர்ச்சியுள்ளதாக இருக்கும்.

இதன் பிறகு தொடங்கும் மூன்றாவது தலைமுறையில் இப்போது இருக்கும் தலைவர்கள் எவரும் இரார். புதிய ஜீவனும், புதிய தெளிவும் கொண்ட புதிய தேசாபிமானிகள் நாட்டின் தலைமையை வகிக்கத் தொடங்குவர். தங்களுக்கு முன்பு இருந்து உழைத்துச்சென்ற தலைவர்களின் பாத நிழலைப் பின்பற்றி ஸ்வதந்தி ரம், ஸமத்வம், ஸகோதரத்வம் என்பதை லக்ஷியமாகக் கொண்டு எல்லாக் கக்ஷிகளையும் ஐக்கியப்படுத்தி ஒரு புதிய ஜனநிர்மாணத் திற்கு அஸ்திவாரமிடுவர். துவேஷம் குறைந்து, மகாத்மாவின் அஹிம்ஸா தர்மம், கதர் இயக்கம் முதலிய கொள்கைகளே ஓங்கி நின்று, சாந்தமான முறையில் தேச முன்னேற்றத்தைக் கொண்டு செல்வர். அதன்பின் உதயமாகும் நான்காவது, ஐந்தாவது தலை முறையில் அனைவரும் விசேஷித்த பரிபக்குவமடைந்தவர்களாய் மகாத்மாவின் சித்தாந்தங்கள் ஸம்பூரணமாய் நிறைவேற்றப்பட்டு ஸ்வராஜ்ய சித்தியும் கொண்டு பரிமளிப்பர். அந்நாளில், மகாத்மா வின் ஜீவிய சரித்திரம் இந்தியா முற்றிலும் ஒவ்வொரு இல்லங்களி லும் பக்தி சிரத்தையுடனும் ஓதப்படும். இனி வரும் புதிய இந்தியா—ஸ்வராஜ்ய இந்தியா-இவ்வாறுதான் உதயமாகுமென்று நமது அகக் கண்கட்குப் புலனாகின்றது. எல்லாம் வல்ல இறைவனார் தம் சித்தம் எவ்வண்ணமுளதோ? எது எவ்வாறாயினும், 'முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்' என்பது யாவரும் கண்டறிந்த—ஒப்ப முடிந்த-உண்மை.

# சொல்-வறுமை

வியாபாரம், கைத்தொழில், அரசியல், ஸமுத்திர யாத்திரை, ராணுவம்—முதலிய துறைகளில் உண்டாகும் ஆயிரக்கணக்கான வியவஹாரங்களை செம்மை, திருத்தம், நுட்பம் இவற்றுடன் குறிப்பிடுவதற்குரிய பதங்கள் நமது சாதாரணப் பேச்சில் அருமையாகிவிட்ட கொடுமை எப்போது நிவர்த்திபெறுமோ தெரியவில்லை. இக்கொடுமையின் துன்பம் தமிழ்ப்பத்திரிகைத் தொழிலிலும், மொழிபெயர்ப்பு வேலையிலும் அனுபவமுடைய ஒவ்வொருவர் மனதிலும் நன்ருக உறுத்தியிருக்கும். இந்தச் சொல்-வறுமை நமக்கு நெடுநாளாக உள்ளதன்று. இது சென்ற நூறு வருஷ காலத்திற்குள்ளாகவே ஏற்பட்டதென்பது நமது கொள்கை.

பொதுஜனங்களின் வாழ்க்கைக்கும் கல்வி கற்ற வகுப்பினரின் வாழ்க்கைக்கும் தொடர்பு விட்டுப்போய் படிப்பாளிகள் தங்கள் நாட்டுச் சாமான்யர்களுடன் பழகாமல் வேறு தேசத்தார்போல் ஆகிவிட்டதிலிருந்து விளைந்திருக்கும் தீமைகளிலே இந்தச் சொல்-வறுமையும் ஒன்று.

தற்காலத்தில் நமது ஜனங்களின் நன்மைக்காக ஒருவன் ஜெர்மன் அல்லது இங்கிலீஷ் பாஷையிலிருந்து ஒரு வியாபார நூலையேனும், அரச நூலையேனும் மொழிபெயர்க்க விரும்புமிடத்து மூல நூலுக்குச் சரியான வார்த்தைகளுக்குத் திண்டாடிப்போய் மூச்சு முட்டும்படியாக இருக்கிறது.

வேறு பாஷைகளிலுள்ள சப்தங்களைத் தமிழ் எழுத்திலே மாற்றி எழுதுவதற்கு "எழுத்துப் பெயர்த்தல்" என்று பெயர். அன்னியாது பதங்களின் அர்த்தத்தைத் தமிழ்ப் பதங்களில் எழுதும் தொழிலை "மொழி பெயர்த்தல்" (தர்ஜுமா) என்பர். **Rock** என்ற இங்கிலீஷ் பதத்திற்குக் "கற்பாறை" என்பது மொழிபெயர்ப்பு. 'ராக்' என்ற இங்கிலீஷ் தொனியை அப்படியே நமது எழுத்தில் காட்டுதல் "எழுத்துப் பெயர்ப்பு." அவ்விதமே ஒரு அன்னிய பதத்தின் அர்த்தத்தைத் தமிழில் சொல்வது "மொழிபெயர்ப்"பாகும்; அந்த அன்னிய பதத்தை அப்படியே தமிழில் அதன் ஓசை கெடாதவாறு தெரிவிப்பது "எழுத்துப் பெயர்ப்"பாகும்.

வேறு பாஷைச் சொற்களைத் தமிழில் "எழுத்துப் பெயர்த்தல்" (உருமாற்றல்) செய்வதற்கு இப்போதுள்ள முக்கியமான தடை யாதெனில், நமது அரிச்சுவடியில் போதுமானபடி எழுத்துகளில்லாமல் இருப்பதே. திருஷ்டாந்தமாக, ஸம்ஸ்கிருத பாஷையில் க—வர்க்கத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் ஐந்து இருக்கின்றன:—

(1) क. க

(2) ख. (Kh = க்ஹ)

(3) ग. (G) 'தங்கம்' என்ற சொல்லில், ககரத்துக்குள்ள மெல்லொலியைக் குறிப்பிடுவது.

(4) घ. (Gh) அதாவது 'தங்கம்' என்ற சொல்லில் ககரத்துக்குள்ள மெல்லொலியுடன் ஹகாரம் ஏறியதாகும்.

(5) ङ. ங

இந்த ஐந்தில் நமக்கு க, ங என்னும் இரண்டு எழுத்துக்களே இருக்கின்றன. இதனுல் ஏற்படும் தொல்லேயைப் பாருங்கள். 'ஹிந்தி' பாஷையில் முதலாவது க. சேர்ந்த ''கௌரீ'' என்ற சொல் ஒன்றுண்டு. அதற்குக் கடலிலே அகப்படும் 'சோவி' (அல்லது 'சோழி'—ஸ்திரீகள் விளையாடுவது) என்று அர்த்தம். இனி, மூன்ருவதான 'க' (X, G) சேர்ந்த ''கௌரீ'' என்ற சொல் பார்வதி தேவியைக் குறிப்பது.

நாம் ''ஹிந்தி பாஷையில் 'சோவி' க்கு 'கௌரீ' என்று பெயர்''—என்று எழுதினுல், படிப்பவர்கள் அந்தப் பதத்தை எப்படி உச்சரிப்பார்கள்? முக்கால் வாசி அவர்கள் ஹிந்தி பாஷையில் 'சோவி' க்கும் பார்வதி தேவிக்கும் ஒரே பெயர் என்று நினைக்கக்கூடு மல்லவா? இப்படி அநேக திருஷ்டாந்தங்கள் காட்டலாம். எனவே, மொழி பெயர்ப்பு (பாஷாந்திரம்) செய்வது லௌகிக வியவஹாரங்களில் எத்தனே அவசியமோ, அத்தனே 'எழுத்துப் பெயர்ப்பு' (அக்ஷராந்தரம்) செய்தலும் அவசியமே யாகும். நமக்குப் பிரதானமாக ஹிந்துஸ்தானி, ஸமஸ்கிருதம் இவ்விரண்டு பாஷைகளையும் 'எழுத்துப் பெயர்க்க' ஸாதனங்கள் வேண்டும். தமிழில் ல, ள, ழ என்று மூன்றுவித எழுத்துக்கள் இருப்பனபோல் மேற்கண்டவற்றை சப்தபேத மின்றி உச்சரிப்பதற்கும் புது எழுத்துகள் உண்டாக்கப் படவேண்டும். உதாரணமாக, ஸமஸ்கிருத ஸ்லோகங்களை சப்த பேதமின்றி தமிழில் எழுதுவதற்குக் கூடாமல் தெலுங்கில் அவற்றை எழுதவேண்டி யிருக்கிறது.

இந்த 'எழுத்துப் பெயர்ப்பு' க்கு பண்டித மணிகள் ஒருங்கு கூடி ஆலோசித்து, ஒரு தீர்மானமான நியதி, ஒரு முறை, ஒரு விதி, ஒரு பிரமாணம், ஒரு முடிவான வியவஸ்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நமது க, ட, இவை போன்ற முதலெழுத்துக்களின் வடிவங்களை இலேசாக மாற்றி, நாம் இப்போதில்லாத குறிகள் அனைத்தும் எளிதாக உண்டாக்கிக் கொள்ளலாம்.

நமது சொந்த மொழிகள் சம்பந்தப்பட்ட மட்டில் நமக்கு இவ்விஷயமாக அதிகத் தொல்லே யில்லே. மெல்லெழுத்துக்குப் பின் வரும்போதும் (திருஷ்டாந்தம் :—பந்து), உயிரெழுத்துக்குப் பின் வரும்போதும் (திருஷ்டாந்தம் :—சுடல்) க, ட முதலிய வல்லெழுத்துக்களுக்கு மெல்லொலி கொடுத்து நாம் சரிப்படுத்திக் கொள்ளுகிறோம். அது நமது பரம்பரை வழக்கமாய்விட்டது. ஆனுல், பிற பாஷைகளிலிருந்து மாற்றும்போது தான் மிகுந்த கஷ்ட முண்டாகிறது. இது பெருங்குறை. இதற்கு நிவர்த்தி தேடவேண்டும்.

பெங்காளிகள், ஹிந்துஸ்தானிகள் முதலாயினேர் அவர்களுடைய பெயர்களை நாம் வெட்கக் கேடாக எழுதும் ஒலி குறைந்த தன்மையைப் பார்த்து விட்டு நம்மை எவ்வளவு ஏளனம் செய்து நகைக்கிருர்களென்பதை நம்மவர்களிலே பலர் அறிய மாட்டார்கள். தமிழ் அகராதியில்

நூற்றுக்கு ஐம்பதிலே குறையாமல், பதங்கள் ஸமஸ்கிருதம் முதலிய அன்னிய பாஷைகளி லிருந்து வந்தனவாகவே இருக்கும். உதாரணமாக, "தூலாமநக்கு என் சொல்வேன் இறைவா கச்சியே கம்பனே" என்று பட்டினத்தார் பாடி யிருப்பதில், 'தூலாம்' என்ற சொல் ஹிந்துஸ்தானி பதமாகும். 'தூலாம்' என்றால் அடிமை என்று பொருள். இந்த ஸ்திதியில் நாம் 'எழுத்துப் பெயர்ப்பு'க்குத் திருத்தமானதோர் வழி இல்லாதிருப்போமானால், உச்சரிப்பில் சுத்த மில்லாமற் போவதுந் தவிர, ஒற்றுமையு மில்லாமற் போகும். அதாவது, ஒரே தமிழ்ச்சொல்லை ஐந்து தமிழர் ஐந்து வகைகளிலே உச்சரிக்க இடமுண்டாகி விடுகிறது.

நவீன சாஸ்திரங்கள், நவீன வியவஹார முறைகள் இவற்றின் விஷயங்களைக் குறிக்கும் பொருட்டு நம்மிலே சிலர் நவீன பதங்களை சிருஷ்டி செய்திருக்கிறார்கள். இங்ஙனம் புதிய மொழிகள் உண்டாக்குவதிலே குற்ற மொன்று மில்லை. இது நியாயமும் அவசியமுமான காரியமேயாம். ஆனால் இங்ஙனம் புதிதாக ஸ்ருஷ்டி செய்யப்பட்ட பதங்களைத் தமிழ் அகராதியிலே சேர்ப்பதில் மிகவும் ஜாக்கிரதை செலுத்தவேண்டும். இப்புதிய மொழிகள் இதுவரை தமிழில் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கும் பத நிர்மாண முறையை ஒட்டி அமைந்தனவா என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழர் செவிக்கு நல்ல ஓசை தருகின்றனவா என்றும் பார்க்க வேண்டும். இவ்விலக்கணங்கள் பொருந்தி யிராவிட்டால் அவற்றை ஒதுக்கி விடவேண்டும். உதாரணமாக, "சட்ட நிருபண சபை" என்பதோர் வார்த்தை சில வருஷங்களுக்கு முன் வரையில் பத்திரிகைகளில் வழங்கி வந்தது. இது நல்ல சேர்க்கை யன்று. சபை என்பது வடசொல்லாயினும், அதிகப் பழக்கத்தால் அது தமிழ் போலவே யாகிவிட்டது. அப்படி யிருந்தும் "சுணக்குச் சபை" என்றால் செவிக்கு அத்தனை நயந் தரவில்லை. "சட்ட சபை" என்றாலும் அத்தனை விகாரமாகக் கேட்காது. "விதி நிர்மாண சபை" என்று சேர்ந்திருந்தால் ஒருவாறு பண்டிதர் செவிக்குப் பொருந்தி யிருக்கும். ஆனால், இது கடின பதமா யிருக்கிறது. 'சட்ட சபை' என்ற பதமே இப்பொழுது பத்திரிகைகளில் வழங்கி வருகிறது.

இன்னும் "மின்சார சக்தி" என்று இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களிலே ஒரு வார்த்தை கற்றுக் கொடுக்கிறார்கள். இதை அகராதியில் சேர்க்க லாகாது. மின்னல் விளைத்தல், தந்தி யடித்தல் முதலிய தொழில்களிலே காரியப்படும் ஸக்தி (Electricity)க்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை "மின்சக்தி" என்றால், தமிழர் செவிக்கு அத்தனை ஹிம்ஸை யுண்டாகாது. இதைப் போன்ற ஆயிரம் குன்றச் சொற்கள் இப்பொழுது புதிதாகக் கிளம்பி யிருக்கின்றன.

தவிரவும், சுத்த இங்கிலீஷ் பதங்களிலே பல இப்பொழுது தமிழ்ப் பாஷையில் கலந்துவிட்டன. இவற்றுள் "மோட்டார் வண்டி" "ரயில்" போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். "ரோட்டு" (Road), "கேட்டு" (Gate) முதலிய அனாவசியமான அபஸ்வரமுள்ள பதங்களை நீக்கிவிட்டு அவற்றின் நேரான தமிழ்ச் சொல்லை உபயோகிக்க வேண்டும்.

சென்னைத் துரைத்தனத்தார் நவீனமாகத் தமிழ் அகராதி தயாரிக்க முயன்றபோது, நமது தமிழ் நாட்டுக் கவிவாணரான ஸ்ரீமான் ஸி. சுப்பிரமண்ய பாரதியாரின் தலைமையின் கீழ் அவ்வேலையைத் தொடங்கி யிருப்பாராயின், தமிழ் மொழிக்கே ஒரு நூதன ஒளி உண்டாகும்படி செய்திருப்பார். சென்றதைச் சொல்லி என்ன பயன்?

---

## கல்கத்தா நகரத்தின் காட்சி

கல்கத்தா நகரத்தின் காட்சி காண்போரின் மனத்தைக் கவரவல்லது. பம்பாய் நகரைவிட மிகவும் ஜன நெருக்கமுள்ள இடம். எத்தகையோரும் பார்த்து வைக்கவேண்டிய பட்டணம். பூந்தோட்டம் இல்லாத வீதி கிடையாது. ஒரே வீதிக்கு ஒரு பர்லாங்குக்கும், இரண்டு பர்லாங்குக்கும் வெவ்வேறு பெயர்கள். இவ்வூருக்கு வரும் எத்தகைய தீரனும் திசை தப்புவான். ஊர் நிதானப்படச் சில மாதங்களாகும். கப்பலில் ஏறுவதும் இறங்குவதும் ரயிலில் ஏறி இறங்குவதுபோல அவ்வளவு சுலபமாய் இருக்கிறது. கப்பல்கள் ஊக்ளி நதி வழியாகக் கல்கத்தாவுக்கு வருகின்றன. பெரிய பெரிய கட்டிடங்கள் சீமையைப் பின்பற்றி யிருந்தாலும் பம்பாய்க்குச் சமமாயில்லை. பம்பாயில் அடுக்கு அதிகம்.

டிசம்பர், ஜனவரி, இந்த இரண்டு மாதங்களிலும் இரவு பகலாய் இடைவிடாத பனியுண்டு. கம்பளி, சால்வை போர்த்தாதவர்கள் கிடையாது. பெரிய வர்த்தகசாலைகளிலும் சால்வை போர்த்திக்கொண்டு உக்கா குடித்த வண்ணமே இருப்பர். டிசம்பர், ஜனவரி மாதங்களில் இரவில் ஜனங்கள் குடை பிடிப்பது வெகு விநோதம். பனி மழைபோல் பெய்யும்; ஜலம்போல் வடியும். பனியை சென்னைப் பக்கத்தார் தாங்குவது மகா கஷ்டம். இவ்விதமே வெயிற் காலத்திலும் உஷ்ணம் சகிக்க முடியாத வண்ணமாக இருக்கும்.

இங்கு ஆங்கிலத்துக்கு விசேஷ மதிப்பில்லை. பொதுவாய் அயலூரார் அனைவரும் பேசுவது ஹிந்துஸ்தானிதான். வங்காளிகள் வைராக்கியமுள்ளவர்கள். தங்களின் வங்க பாஷையிலேயே எந்த வியவகாரங்களையும் வைத்துக்கொள்வர். எவ்வளவு ஆங்கிலம் படித்தவர்களும் கூட, எந்த அவசரத்திலும் வங்க பாஷையிலேயே பேசுவர். உயர்ந்த கல்விமான்களும் தாங்கள் முதலில் எழுதும் நூலை வங்க பாஷையிலேயே வரைவர். பின் அதினின்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பர். முதன் முதலில் தங்கள் நெஞ்சில் ஊறிப் பெருகிய வித்தியா சக்தியை வங்கபாஷைக்கே கொடுத்து அதைக் கௌரவிப்பர். நம் தமிழ் நாட்டினரோ இதற்கு முற்றிலும் எதிரிடையானவர்கள். சிறிது ஆங்கிலம் கற்றிருப்பினும் அதில் தான் உளறுவார்களே யன்றி, ஸ்வபாஷையில் அவ்வளவுக்குப் பேசார். தமிழ்ப் புஸ்தகங்

களை வைத்திருந்தாலும் சில தாய் தந்தையர்களுக்குக் கோபமுண்டாய் விடும். "தமிழ் உனக்குச் சோறு போடுமா? இங்கிலீஷைப் படி"—என்று தங்களின் குமாரர்களைக் கோபிப்பர். ஒரு பிரஸித்த தமிழ்ப் பண்டிதரே தமிழைப் பழித்துப் பேசியதைக் கேட்டிருக்கிறோம். கல்கத்தாவில் எவருக்கும் தங்களின் வங்க பாஷையில் அளவற்ற அபிமானம் உண்டு.

கல்கத்தாவில் ஆண் பெண் இருவரும் உடுப்பது கரைபோட்ட வெள்ளை உடையே. வங்காளிகள் ஜாதி மதாசாரத்தில் வெகு கண்டிப்புள்ளவர்கள். தெய்வ பக்தியிலும் சிறந்தவர்கள். குடும்ப ஸ்திரீ எவ்வளவு ஏழையானாலும் பகிரங்கமாய் வெளியில் வருவதில்லை. இவ்விடம் ஸ்திரீகளுக்கு மூடு பல்லக்கு உண்டு. ஒரு பெண் ஒரு தினத்தில் நான்கு தடவை தனது உடையை மாற்றுவாள். அந்தி வேளையில் அழகான உடையை யணிவார்கள். ஸ்திரீகளின் முகத்தை ஆடவர் நோக்கார்; அதனை யொரு அவமானமான செய்கையாகப் பாவிப்பர். விதவைகளுக்குக் கட்டுப்பாடு அதிகம். சுத்த வெள்ளை உடையும் ஒரு வேளை ஆகாரமுமே. வெற்றிலைப் பாக்கு தொடலாகாது; இன்னும் பல நிர்ப்பந்தங்களும் உண்டு. அநேகமாய்த் தமிழ் நாட்டுப் பிராமணர்களைப் போலவே விதவா விவாகமும் இங்கு கசப்பு தான்.

தமிழ் நாட்டுப் பிராமணர்கள் வெங்காயம் புசிப்பதைப்பற்றி வெகுவாய் வங்காளப் பிராமணர்கள் வருந்துகிறார்கள்; அது மிகவும் பாபமாம். ஆனால், தமிழ் நாட்டுப் பிராமணர்கள் மச்சம் உண்பதில்லையா வென்று வெகு ஆச்சரியத்தோடும் கேட்க வருவர். மச்சம் புசிப்பது பாபமில்லை, வெங்காயம் உண்பது பாபம் போலும்! இதுவும் ஒரு விநோதம்.

மதுரை, திரிச்சி, தஞ்சை வாசிகள் இவ்விடம் அதிகம். அவர்களுக்குத் தனியாக ஒரு தெருவே ஏற்பட்டுள்ளது. பாலக்காடு மலையாள வாசிகள் பம்பாயில் தான் விசேஷம். நாகரீக உற்பத்தி ஸ்தானமாகிய கல்கத்தாவுக்கு ஒருமுறை வந்து யாவும் தெரிந்து கொள்வது அறிவுப் பெருக்குக்கு நல்ல தூண்டுதல் செய்யும். தென்னாட்டார் இவ்விடம் வெள்ளையர் தொப்பியைத் தான் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். இது தங்களின் ஜீவன லாபத்தை உத்தேசித்துத் தான். இந்தியாவில் பூர்வீகமாய் இருந்துவரும் மதாசாரம், குலாசாரம் இவைகள் மேல்நாட்டு நாகரீகப் பிரபாவத்தால் ஒரு சள்ளை பிடித்த விலங்காகவே கருதப்படுகிறது. இக்கால சௌகரியத்தையே உசிதமான நாகரீகமென ஏற்கின்றனர். வெளியூரார் இங்கு எந்த வேலைக்கும் ஒரு 'ஏஜண்டை'ப் பிடித்தால் தான் காரியம் நடக்கும்.

வி. பி. வியாபாரங்களில் கல்கத்தா முதற்றரமாய் விளங்குகின்றது. பத்திரிகையில் ஏராளமாய் விளம்பரங்களைப் பிரசுரிப்பர். எந்த அல்ப விஷயத்துக்கும் விலாசம் அச்சிட்ட கடிதத்தையே உபயோகிப்பர். சிறிய வியாபார மாயினும் ஆடம்பரங்களும், அச்சிட்ட காகிதங்களும் அதிகமாக இருக்கும். தங்களின் வர்த்தகத்திற்கான வஸ்துக்களையும் டப்பிகளையும் வெகு பொருட் செலவில் கண்ணைக் கவரும் விதமாய்த் தயாரிப்பர். பி. ஏ., எம். ஏ. வரையும் வாசித்துவிட்டு வியாபாரத்தில் தங்களின் சிந்தையை ஊன்றுவோர் இங்கு அதிகம். தங்கள் தேசம், தங்கள் நாடு என்ற தேச பக்தியில் கல்கத்தா வாசிகளின் பிரஸித்தி எல்லோரும் அறிந்ததே.

## இஃதில்லாவிடிற் சிறப்பில்லையெனல்

ஏற்றபல சாத்திரங் கற்றுறு மெய்ஞ்ஞான
மில்லாத கல்வி யென்ன?
இவ்வுலகி லேபிறந் திட்டபின் கீர்த்திதான்
இல்லாது சாவ தென்ன?
போற்றவரு புண்ணியம் பாவம் பகுக்காத
புல்லருக் கிதமு மென்ன?
பொருளீகை யில்லாத லோபிமேற் கவிதைபகர்
புலமையாற் கணிச மென்ன?
ஆற்றலென் பதுகண் டடர்ந்திடாப் பேடிகையி
லாயுத மிருந்து மென்ன?
அடுத்திடு விருந்துகண் டுபசரிக் காதுவெற்
றன்னமுங் கோட்டி யென்ன?
மாற்றரிய விவையெலா முனே வணங்காயர்க்கை
மானிட ரடைந்த தொக்கும்;
வரைராஜ குமரிமடி மீதுவிளையாடல்புரி
மணிகோண் டவடி வேலனே.

*பகுத்தல்=ஆராய்ந்தறிதல்; புல்லர்=அற்பர்; புலமை=கல்வி; ஆற்றல்=ஆண்மை; கண்டு=செய்து; அடர்த்தல்=எதிர்த்தல்; மாற்றரிய=நீக்குதற்கு அருமையான; யாக்கை=சரீரம்; கணிசம்=லாபம்.*

---

## வில்லியம் ஷேக்ஸ்பியர்

வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர் ஆங்கிலத்தில் முதற்றரமான நாடக கவி. உலக வியற்கையை உய்த்துணர்ந்த பல்லோர்களில் இவரே வல்லோர். கேவலம் படிப்பினால் மட்டும் இவரது புத்தி விசாலித்த தென்பது தப்பு. இவரை வரகவி யென்னலாம். பகவானது வரப்பிரஸாதத்தாலும் பூர்வ ஜன்ம புண்ய பலத்தாலும் இவர் என்றென்றைக்கும் அழியாப் புகழை யடைந்துவிட்டார். மனிதர்களை இருந்தும் இறந்தவர்களென்றும், இறந்தும் இருந்தவர்களென்றும்—இருவகையாகப் பிரிக்குமிடத்து, இரண்டாவது பிரிவில் முதன்மையை யுடையவர் ஷேக்ஸ்பியர் தான். வெகு பேர்கள் படிப்பின்றி புத்தி மழுங்கி பூமிக்குச் சுமையாய்


சோற்றுக்குப் பாரமாய் மாமிச பர்வதங்களாய்த் திரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உயிர் இருந்தும் இவர்களை இறந்தவர்களாகவே யெண்ணுகிறோம். பண்டித சிரேஷ்டர்களாய், நற்காரியங்களைச் செய்பவர்களாய், லோகப்பிரியர்களா யிருக்கும் மகான்கள் இறந்துபோனாலும் அவர்களை உயிருடன் இருக்கிறவர்களாகவே எண்ணுகிறோம். மகா வித்வான்களது சரித்திரங்களையும் அவர்கள் செய்திருக்கும் கிரந்தங்களையும் நாம் படிக்கும்போது அவர்களுடன் நேரில் ஸம்பாஷிப்பதுபோல் மகத்தாகிய ஆநந்தத்தை யடைகிறோம். நாம் நடக்கவேண்டிய நெறிகளையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறோம்.

ஷேக்ஸ்பியரது தந்தையின் பெயர் ஜான்ஷேக்ஸ்பியர். அவர் நடுத்தரமான ஸ்திதியுள்ள பெருங் குடும்பி. ஷேக்ஸ்பியரின் இளம் பிராயத்தில் இன்ன நடந்ததென்பதை அறியக் கூடவில்லை. ஆனால், அப்போது பரவியிருந்த கொள்ளைநோய்க்கு அவர் பலியாகாமல் பிழைத்துக்கொண்டாரென்பதை மட்டும் அறிகிறோம். அதன் பிறகு அவர் தம்முடைய ஊரிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார். அக்காலத்தில் லத்தீன், கிரீக்கு முதலிய பாஷைகளைச் சிறிது அப்பியாசித்தார். அதற்கு மேல் அதிகமாய்ப் படிக்க முடியாமற்போயிற்று. இதற்குக் காரணம் இவரது தந்தையின் வறுமையேயன்றி வேறல்ல. ஆயினும், மகா புத்திமானாகிய ஷேக்ஸ்பியருக்கு படிப்பு சொற்பமானாலும், அதன் மூலியமாய்த் தம்முடைய பிற்காலத்தில் இத்தலி, பிரஞ்சு முதலிய பாஷைகளைப் பயின்றார். அநேகமாய் ஆசானுடைய உதவியின்றி ஸ்வயமாகவே எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தார். இம் மேதாவியின் ஸமயோசிதமான வார்த்தைகளை உடனுக்குடன் எழுதி வைக்கத்தக்க அறிவாளிகள் அக்காலத்திலில்லை.

ஆங்கிலேய பாஷையில் இப்புலவர் பெருமான் எழுதியுள்ள நாடகங்கள் 37-ஆகும். இந்நாடகங்களை இவர் எழுதியிராவிட்டால் நாம் இவரைப்பற்றி இப்போது அறிவதுபோல் அறியமுடியாது. பிற்காலத்தவர்களின் பிரதி யுபகாரத்தைச் சற்றேனும் கருதாது கல்விச் செல்வத்தைக் குவித்துவைத்த ஷேக்ஸ்பியரின்பால் நன்றி பாராட்டாதவன் எவனுளன்? அவரது நாடகங்களைப் படிப்பதால் உலக வியற்கையும், நன்னடக்கையும், விவேகமும் தினே தினே விர்த்தியடையும்.

ஷேக்ஸ்பியர் பாடசாலையைவிட்டு கசாப்புக் கடைக்காரனானதாகச் சிலரும், பையன்களை ஆடுகள்போல் நினைத்து அவர்களின் தோலையுரிக்கிற தொழிலாக, அதாவது மற்றொருவிதமான கசாப்புக் கடைக்காரத் தொழில்போல் அக்காலத்திலிருந்த உபாத்தியாயர் வேலையை யடைந்ததாகச் சிலரும் கூறுகிறார்கள். 'மாலோன்' என்பவர் ஷேக்ஸ்பியர் வக்கீலிடம் குமாஸ்தாவாக அமர்ந்தாரென்று சொல்லுகிறார். எப்படியாயினு மாகுக. அவர் தம்முடைய 18-ம் வயதில் 'ஆனிஹாதவே' என்னும் ஸ்திரீயை விவாகம் செய்தார். அவளுக்கு அப்போதான வயது 26. இப்படி 8-வயது அதிகமாய் முதிர்ந்தவளைத் தாரமாய்க்கொண்டது ஷேக்ஸ்பியருக்குக் கோரமாய் முடிந்தது. 1583-ம் வருஷத்தில் அவருக்கு 'சூசன்னா' என்னும் ஒரு புத்திரி பிறந்தாள். அதன் பிறகு ஒன்றரை வருஷம் கழித்து 'ஹாம்னெட்' 'ஜூடித்' என்ற இரட்டைக் குழந்தைகள் பிறந்தார்கள். ஷேக்ஸ்பியருக்கு ஒரே பிள்ளையான 'ஹாம்னெட்'

செனிபில்டர் ஓர்க்ஸ் டிராயிங் புஸ்தகம்.



“ஆனந்தகுணபோதினி அநுபந்தம்”

# செனிபில்டர் ஒர்க்ஸ்

## டிராயிங் புஸ்தகம்.

கவர்ன்மெண்ட் டெக்னிகல் பரிட்சைக்குப் போகும் லோயர் ஐயர் கிரேட் மாணவர்களுக்குப் பிரயோசனமுள்ள பிரி ஆண்டு டிராயிங் புஸ்தகம்

**பார்ட் I. ஆர்ன்மெண்ட்**

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை டிராயிங் மாஸ்டருக்கு ... ... ரூபாய் 1—0—0

மற்றவர்களுக்கு ... ... ,, 1—8—0

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

**செனிபில்டர் ஒர்க்ஸ்**

லித்தோகிராபர்ஸ், கலர்பிரிண்டர்ஸ்.

40, வெங்கடேசகிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

என்பவன் 12-ம் வயதில் இறந்து போனான். பெண்கள் இருவருக்கும் கல்யாணமாயிற்று. ஷேக்ஸ்பியர் வம்சத்தில் கடைசியாக 'லேடி பெர்னூடு' என்னு மொருத்தி இருந்தாள். அவளும் 1670-ம் வருஷத்தில் இறந்து போனாள்.

ஷேக்ஸ்பியர் குடியிருந்த வீட்டை அநேக பிரபுக்களும் அரசர்களும் போய்ப் பார்த்து வந்தார்கள். ஷேக்ஸ்பியரது ஜன்ம ஸ்தானமாகிய 'ஸ்டார்ட் போர்ட்' டிலுள்ள ஜனங்கள் நாடகப் பிரியர்கள். 1569-ம் வருஷ முதல் 1587-ம் வருஷம் வரையில் சுமார் இருபது தடவை அவ்வூரில் நாடகம் நடந்தது. அவைகளை யெல்லாம் ஷேக்ஸ்பியர் பார்த்ததினாலேதான் நாடகத்தில் அவருக்கு ஆசையுண்டாயிற்றென்று சிலர் சொல்லுகிறார்கள். முதலில் இவர் நாடகங்களிற் சேர்ந்து வேஷம் போட்டுக் கொண்டு ஆடினாரென்றும், பிறகு ஸ்வயமாகவே நாடகங்கள் எழுதத் தொடங்கினா ரென்றும் கேள்விப்படுகிறோம்.

நாடகத்தின் மூலம் பெரிய மனிதர்களின் விஸ்வாசத்தை யடைந்து தனவானாகி ஷேக்ஸ்பியர் தம்முடைய சொந்த ஊரில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அதன் பின்புறத்தில் ஒரு தோட்டமுண்டாக்கினார். இங்கிலாந்தை யாண்ட 'எலிஸபெத்' என்னும் அரசியும், 'ஜேம்ஸ்' என்னும் அரசனும் ஷேக்ஸ்பியரிடம் பரம விசுவாசமா யிருந்தார்களென்பதில் தடையில்லை. ஆனால் அவர்களுடைய விசுவாசமெல்லாம் (நம் நாட்டுப் பிரபுக்கள் படித்தவர்களிடம் காட்டும் போலி யன்புபோல்) வீண் விசுவாசமாகவே முடிந்தது. வாய் உபசாரமேயன்றி வேறில்லை. முற்காலத்திலிருந்த போஜராஜன் 'அக்ஷரலக்ஷம் ததௌ' என்றாராம். அதாவது, யாரேனும் வித்வாம்சர்கள் சுலோகம் சொன்னால், அதற்காக அவர்களுக்கு அந்த சுலோகத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் ஒவ்வொரு லக்ஷம் ரூபாய் பரிசளிக்கும்படி சொல்வாராம். ஆங்கிலேய அரசர்களோ அப்படியல்ல. நாம் பதினாயிரம் இருபதினாயிரம் செலவழித்து அவர்களுக்கு விருந்து செய்தாலும், அல்லது லக்ஷம், இரண்டு லக்ஷம் மதிப்புள்ள ஆபரணங்களைக் காணிக்கையாகக் கொடுத்தாலும் அவைகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டு அதற்குப் பிரதியாக (Thanks) 'வந்தனம்' என்பார்கள். இவ்வளவுதான் அவர்கள் செய்யும் எதிர் மரியாதை. அதுபோல் ஷேக்ஸ்பியருக்கு எலிஸபெத்தும், ஜேம்ஸ் அரசரும் வாய் உபசாரம் மாத்திரம் இனிக்கப் பேசி, திரவிய சகாயம் செய்வதில் மட்டும் ஒதுங்கிக் கொண்டார்கள். இக்காலத்திலும் ஏழை நூலாசிரியர்களிடம் அவர்கள் இயற்றிய புஸ்தகங்களை யாதொரு செலவு மின்றி இனாமாகப் பெற்றுக்கொண்டு பரம விசுவாசமுள்ளவர்கள் போல் வந்தனங் கூறி வெறுமனே வெறுங் கையாக அனுப்பிவிடும் பெரிய (?) மனிதர்கள் எத்தனை பேர்! ஷேக்ஸ்பியரின் கதையும் இவ்விதமே முடிந்தது. கடைசியாக, ஷேக்ஸ்பியர் சிறிது திரவியம் சேகரித்துக் கொண்டு தாம் பிறந்த ஊருக்குச் சென்று, அங்கு சில காலம் சுகமே வசித்து, கி. பி. 1616-ம் வருஷத்தில் இப்புவன வாழ்க்கையைத் துறந்து கடவுளின் பாத நிழல் எய்தினார். "தோன்றிற் புகழொடு தோன்றுக." இறந்த பின்புதான் வெகு பேருக்குக் கீர்த்தி. பத்திரிகைகளிலும் ஒரு முழ நீளம் வரும்.

---

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

# விகடப் பிரதாபன்

(Registered.)

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

## ஆடி மாதத்து அழகு கதை.



ஏதப்பா நமம விகடன் ஊர் கதையை மெல்லுவதை விட்டு மாதக்கதையை இழுத்துக்கொண்டு மத்தளம் கொட்டவந்தான் என்பீர்களோ? அப்படியல்ல சங்கதி. எதிலும் ஒவவொரு தத்துவமும் ஞானமும் இல்லாமற் போகவில்லை. ஒவவொன்றிலும் புகுந்து நுழைந்து கவனித்தால் காணாத விசித்திரமெல்லாம் காணலாம். கண்டு உணராத கலைஞானங்களையெல்லாம் அறியலாம். அநுபவாமிர்தத்தை எந்த ஒரு அல்பத்திலும் கூடப் பானம் செய்யலாம். சொல்கிறவனிடத்தில் என்ன இருக்கிறது? கிரகிக்கிறவனிடத்திலல்லவா சக்தியும் மேன்மையும் தங்குகிறது. உறவுக்குள்ளேயே சோதித்துப் பார்த்தால் அங்கும் எத்தனையோ புழுக்கள் மலிந்து நிற்கும். ஒரு பக்கம் தூண்டிக்கொடுத்து ஒருவனோடு ஒருவனை விரோதப்படுத்திவிட்டுக் கடைசியில் இரண்டுபேருக்கும் வேண்டிய மனிதனாக நிற்பவர்களைப் பந்துவின் முறையில் எத்தனையோ பேரைப் பார்த்துக் கசந்து போகலாம். அப்படிப்பட்டவர்களுக்கே நாம் பிறகு பலபல செய்யும்படியும் நிலை மாறலாம். ஒருவனைச் செருப்பாலடிப்பதாகச் சொன்னவனை அவனிடமும் மறுபடியும் கொஞ்ச, கெஞ்ச, அண்டவரலாம். உள்ள உலக உண்மையை உரைக்கப் புகுந்தால் அதிலும் பலருக்குக்குக் கோபம் மிஞ்சலாம். பந்துவர்க்கத்தை விட்டு வியாபார வகுப்பில் புகுந்தால், இன்று நன்றியுள்ள வேலைக்காரனே நாளைக்கு நமக்குப் போட்டிக் கடை வைப்பவனாகலாம். உத்தியோகத்துக்குள் புகுந்தால், அதில் நம்மிடம் நெருங்கிப் பழகுவோரே பிறகு நமது வேலைக்குப் பின்னம் தேடுவோராகலாம். வாரச் சந்தையிற் புகுந்தாலோ, வாரத்து ஏழு நாட்களுக்கும் ஒவ்வொரு பலாபலன் சொல்வதைக் காணலாம். அப்படியே மாத தேவதைகளை ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் ஒவவொரு மாதத்துக்கும் ஒவ்வொரு சங்கதி தோன்றிக்கொள்கிறது. ஒவ்வொன்

றிலும் ஒரு பண்டிகை, உத்ஸவம், விரதநாட்களெல்லாம் நுழைந்து கொண்டு அதற்கான கதைகளையும் கட்டிவைத்துக்கொண்டு காத்து நிற்கிறது.

இவ்வாறுனவற்றில் நடக்கிற ஆடிமாதத்தையே விகடன் எடுத்துக்கொண்டு அலசிப்பார்த்து ஆராய்கையில், அதிலும் அடுக்கடுக்காக அநேக ஞானங்கள் எதிர்ப்பட்டுக் கொள்ளவே, அதை இதையெல்லாம் பேசுவதை அடுத்த மாதத்துக்கு வைத்துக்கொண்டு, இப்போது ஆடி மாதத்து அழகு கதையைப் பேச என் வாயை திறந்து கொண்டேன். அறிகிறவன் எதிலும் அறியலாம். அள்ளுகிறவன் எங்கும் அள்ளலாம். கிள்ளுகிறவன் எப்படியும் கிள்ளலாம். தூர ஒதுங்குகிறவர்கள் எதிலும் ஒதுங்கலாம். சிரிக்கிறவன் எதிலும் சிரிக்கலாம். பிரிக்கிறவன் எந்த அல்பத்தையும் பிரமாதப் படுத்திப் பிரிக்கலாம். அவனும் பேசலாம், இவனும் குலாவலாம். இருவர்க்குள்ளேயுள்ள கபட நெஞ்சும் அவரவர்களுக் குள்ளேயே அடங்கியும் இருக்கலாம். அன்பும் காட்டலாம். உள்ளுக்குள் அத்தனையும் அழுகி நாறியும் கிடக்கலாம். செய்யவும் செய்யலாம், செய்தவர்களுக்கே கெட்டபேர் வரவும் வரலாம். வெளிக்குக் கலகலப்பாய் இருக்கலாம். உள்ளுக்கே பெரும் ரோதனையாகவும் தியங்கலாம். ஐயோ பாவம் என்று நாம் இரக்கப்படுகிறவனே நமக்குச் சுண்ணாம்பும் தடவ வரலாம். தடவிவிட்டுப் பிறகு தர்மதேவதையிடம் அவன் சிக்கித் தத்தளிக்கவும் தத்தளிக்கலாம். நெருங்கிப் பழகுபவரே நேரான அநுகூல சத்துருவும் ஆகலாம். ஒருவன்மீது எழுந்த ஆத்திரத்தை அப்போது அடக்கிப் பிறகு அடுத்துக் கெடுக்கவும் மாறலாம். வாய் இனிக்கப்பேச, உள்நாக்கு நஞ்சிலே நனைய, உள்ளமோ படுமோசத்தில் கை நனைத்திருக்க—இப்படியும் அநேகம் காணலாம். காண்கிறவன் எதையும் காணமுடியும். கண்டு கொள்கிறவன் கண்ணில்தான் எதுவும்போய் முட்டிக்கொண்டு தன்னை வெளியில் கக்கிக்கொள்ளும். அப்படியாக, இந்த ஆடிமாதத்து அழகு கதையிலும் அநேக சங்கதிகள் ஞானங்கள் அடங்கி நிற்கின்றன. எதுவும் உற்றுப்பார்த்தால் உண்மை விளங்கும். தேடிப்பார்த்தால் அகப்படாததும் அகப்படும். கஷ்டப்பட்டால் கிடைக்காததும் கிடைக்கும்.

ஆடிமாதமென்பது கடக மாதம். கடகம் என்பது நண்டு. இந்த நண்டின் கொடுக்கிலே ஞாயிறு ஆகிய சூரியன் அகப்பட்டுக் கொண்டு திகைக்கும் ஒரு மாசம் தான் ஆடிமாசம். ஆடி மாதத்தின் ஆரவாரம் கேட்பானேன்? அந்த மாதத்தின் பெருமையோ கோடி கோடி! பின்னுக்கு வருகிற பண்டிகைகளுக் கெல்லாம் இதுதான் முதல் மாதம். "ஆடி மாதத்தில் கோடி கட்டவேண்டும்," "ஆடி தேங்காய் தேடித் தின்னு," "ஆடி மடவை மீன் தேடிப் பிடி," "ஆடி விரைதேடி விதை," "ஆடி பணியாரம் தேடிச் சுடு," "ஆடிக்குப் பெண்ணைத் தேடி யழை"—என்றும், ஆடிக் காற்றுக்கு அஞ்சாத திவ்லை யென்றும், ஆடிக் காற்றில் உதிரும் சருகுபோல் அவன் குடும்பம் அழிகிறதென்றும், ஆடியற வெட்டை அகவிலை நெல்விலை யென்றும், ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்துபோமென்றும், ஆடிக் காற்றில் எச்சிலைக்கு வழியுண்டா வென்றும், ஆடிக் காற்றில் இலவம் பஞ்சு படும்பாடென்றும், ஆடிக்கு அழைக்காத மாமியைத் தேடிப் பிடித்துச் செருப்பாலடியென்றும்,

ஆடிப் பூர நக்ஷத்திரமென்றும், ஆடி நீதி யென்றும், ஆடி அமாவாசை யென்றும், ஆடி கும்பம் என்றும், ஆடி பூசையென்றும், ஆடித் திரு விழா வென்றும், ஆடி தேர் என்றும்—ஆயிரம் சங்கதிகளைச் சொல்லி, ஆயிரம் செலவு வைத்துக் கொண்டு ஆடவரை அவரவர்கள் வீட்டு ரத்தி ருங்கிகள் ஏமாற்றுவதும், ஆடவர் களும் ஊர் வழக்கங்களுக்குக் கட்டுப் பட வேண்டியவர்க ளாவதும் நினைக்க நினைக்கச் சிரிப்பு தான்.

ஆடி மாதம் வந்துவிட்டதென்றால், அப்பனே! உலகத்தில் இன்னும் சத்தியம் தர்மம் இருக்கிறதடா வென்று காட்டுவதுபோல் கனபிரவாகமாய் ஆறுகளிலெல்லாம் வெள்ளம் பொங்கிப் பிரவகிக்கும். வாயிற்படியிலெல்லாம் வகை வகையாய் வெள்ளம் வந்து எட்டி முட்டிப் பார்க்கும். தூங்கி விழிப்பதற்குள்ளாக வீட்டைச் சுற்றிலும் வெள்ளப் பெருக்கு சூழ்ந்து கொள்ளலாம். "ஆறு நேரான ஊரும், அரசனோடு எதிர்த்த குடியும், புருஷனோடு ஏறுமாறான பெண்டிரும் நீறு நீறாகி விடும்" என்பது போலவும், "ஆறு நேரான ஊர் நிலை நில்லாது" என்பது போலவும், "ஆற்றருகில் இருந்த வாழ்வும், அரசறிந்த வாழ்வும், நிலையல்ல" என்பது போலவும், ஆற்றின் ஓரம் குடியிருந்தவர்களெல்லாம் தட்டுமுட்டுச்சாமான்களோடும் வேறு இடம் ஓடவேண்டியதாக நேரும். இருந்த இல்லமும் இடிந்து பாழாய், இருந்த விதையும் சேதமாய், அல்லோ கல்லோலம் விளைக்கும். "ஆற்றிலே கணுக்கால் தண்ணீரிலும் அஞ்சி நடக்கவேண்டும்" என்று சொன்னதற்கும் மேற்பட்டு ஆற்று ஓரத்திலே கால் வைத்தாலும் இழுத்துக் கொண்டுபோய் விடுகிற மாதமும் இதுதான். "ஆற்றுப் பெருக்கும் அரசும் அரை நாழி" என்று சொல்லப்பட்டாலும், அரை நாழி வேலை எத்தனை கண்ராவிகளைக் காணும்படி வைத்து விடுகிறது? "ஆற்றோடே போனாலும் போகிறதே யல்லாமல் தெப்பக்காரனுக்கு ஒரு காசும் கொடுக்கிறதில்லை" என்ற பரம பிசினாரிகளும் கூட தங்களின் பிடிவாதத்தை விட்டு விடுகிற மாதமும் இதுவே.

இன்னும் ஆசாரிகளுக்கும் பூசாரிகளுக்கும் ஆநந்தம் கொடுக்கிற மாதமும் இதுவே. மேலும், ஆகாத வேப்பிலைகூட அகவிலை விற்கும் மாதம். சித்திரை மாதக் கல்யாணச் செலவுக்கு இது வட்டி மாதம். சித்திரை மாதத்திலே செலவு செய்ய மறந்துபோன அம்மாமார்கள் அந்த ஆசையை இந்த மாதத்திலே தீர்த்துக் கொள்வார்கள். அல்லாமலும், "விசும்பிற் றுளி வீழினல்லால் மற்றாங்கே — பசும்புற்றலை காண்ப தரிது" என்றபடி பூமியில் கொஞ்சம் மழையினுடைய ஈரம் படுவதால் புல் முதற்கொண்டு மனிதர் வரைக்கும் சினைகொள்ளும் காலமாயும் இருக்கிறது. ஆகவே மனிதர்களின் சிற்றின்பத்திற்குக் காரணமா யிருக்கிற பித்தச் சூடானது கடந்த மாதங்களி லெல்லாம் விர்த்தியாகிக் கொண்டுவர, இந் நாளில் ஈரம் குளிர் அதன்மேல் தாக்குவதால், விசேஷமாய் ஆவிர்ப் பவித்து அதிகமான சிற்றின்ப வாஞ்சையை உண்டாக்கி விடும். ஆதலால், இம்மாதம் கர்ப்பம் தரிக்கில், சித்திரை மாதம் இதற்குப் பத்தாவது மாதமாக வந்து நேர்ந்து கொள்ள, அம்மாதத்தில் பிறக்கும் சிசு, "சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் ஆனகுடிக்கு அனர்த்தம்"—என்பது போல் ஆகாததா யிருக்கும் என்று உத்தேசித்து,

முன்னைய தாதாக்கள்,—இப்போதைய ஏற்பாடான பொம்மைக் கலியாண லதிபதிகளைப் போல் அல்லாமல்—நன்றாய் முற்றித் தேறி, நேரான விவாக முறை யடைந்தவர்களுக்கே பழய நாளில் விவாகம் நடத்திவந்தார்க ளானதால், அப்படிப்பட்ட மாப்பிள்ளையையும் பெண்ணையும் பிரித்து வைக்க ஏற்படுத்தியிருக்கிறபடி, புது மாப்பிள்ளையும் பெண்ணும் பிரிந்து வாழும்படியான மாதம். எல்லா மாமிகளும் புதிய மருமகன் மீது நினைவு கொண்டு பலவகைப் பக்ஷணங்கள் தயாரிக்கிற மாதம். முன் மாதத்திலே நடந்து முடிந்த கலியாணத்திற்கு நடுவில நேர்ந்த மனஸ்தாபங்களை யெல்லாம், பெண் வீட்டார் வரிசை கொண்டு வந்து அழைக்கும் நேரத்திலே வாரிக் கொட்டிவிடுகிற மாதம். மாப்பிள்ளைகள் சுகமாக மாமியார் வீட்டில் பல வகைப் பலகாரங்களை விழுங்கி உல்லாஸப் படுகிற மாதம். ஆடி பதினெட்டாம் பெருக்குக்குப் பெண்களெல்லாம் ஆற்றோரம் வந்து குந்தித் தங்களின் ஆபரணங்களை யெல்லாம் ஆற்று அம்மனுக்கு அலங்கரிப்பதற்காகக் கழற்றி வைத்து புதிய முறம், மஞ்சள், அரிசி, கண்ணாடி வளையல்கள் முதலியவற்றோடும் கும்பிடு போடுகிற மாதம். இவ்விதம் கும்பிடுகையில், இரண்டொரு நகைகள் ஆற்றில் விழுந்துவிடவும், அதை எடுக்கப்போய் ஆற்றோடு காலைக் கிளப்பிக் கொள்வதும், அருகில் இருக்கும் பெண்களே நகையை மறைத்து விட்டுக் "கோழித்திருடி கூடக் குலாவுவதுபோல்" குலாவுவதான அங்கலாய்ப்பு வேடிக்கைகள் நடக்கும் மாதம். ஆரம்ப மாப்பிள்ளைகளும், ஆரம்பக் குடிப்பெண்களும் அலங்காரமாய் ஆற்றோரம் வந்து முழுகி அழகழகான புதிய வஸ்திரங்களையும் சேலைகளையும் உடுத்தி மேள வாத்தியங்களோடு வீட்டுக்குச் செல்லுகிற மாதம்.

புதுப்பெண்கள் தங்களை அன்புடன் நெருங்கி நேசித்த பிராணபதிகளைப் பிரிந்து அவர்களின் நினைவெடுத்துக் கொண்டு நித்திரை வராது தவிக்கிற மாதம். புது மாப்பிள்ளைகள் தங்களின் மனைவி பக்கத்தி லிராமல் பல சிந்தனைகளில் புத்தியை யோட்டி அவஸ்தைக்குள்ளாகிற மாதம். அந்தந்தப் பெண்களும் தத்தம் நாயகரைப் பிரிந்து தாய் வீடு செல்லும் மாதமானதால், இந்த சமயம் பார்த்து வலை வீசி மயக்கி ஆடவரைத் தம் வசப்படுத்திக் கொள்ள நினைக்கும் பரத்தையருக்கு இது கொஞ்சம் கந்தாய நாள் தான். இத்துடன் குழந்தைகளுக்குக் கண்ணோய் உண்டாகிற மாதமும் இதுதான். ஒரே நாளில் இரண்டு வேளைகளில் கண்ணோயைக் குணப்படுத்த மருந்துகள் ஆஸ்பத்திரியிலிருந்தும், வெறும் படிக்கார ஜலத்தை ஊற்றி அனுப்பும் நாளும் இதுவே. ஐயோ! கண்வலியைப் பொறுக்க யாரால் ஆகும்? பகலுக்கெல்லாம் ஒன்றுமில்லாம லிருந்து, இரவு நெருங்கியதும், மாலைக் காலம் வந்ததும் பீளைக் கட்டிக்கொண்டு கண்ணில் மணலைப் போட்டுத் தேய்த்தது போல அலறிக் கொள்கிற மாதமும் இதுதான்.

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு தானியமும் மிஞ்சாது" என்பதாகப் பரிதபிக்கும் உழவர்களெல்லாம் வானத்தைப் பார்த்து மகிழ்ந்து, முன் கஷ்டங்களை மறந்து, வயல் நிலமே கதி யென்று நம்பிப் பாடுபட இறங்கும் மாதமும் இதுவே. இம்மாதத் துவக்கத்திலிருந்து தூவும் மழைத் தூற்ற

லானது இதற்கு முன் மாதங்களில் காய்ந்த சூரிய வெப்பத்தினால் வேக்காடு கொண்டிருந்த பூமியின் அனலை வெளிக் கிளப்புவதோடு அசுத்த ஆவியையும், அதாவது விஷக் காற்றையும் கூடவே எழுப்பி விடுவதா யிருப்பதால் தேச முழுதும் வாந்திபேதி, நெருப்புச் சட்டிப் பண்டிகையான பிளேக்கு, சோழ பொறி பண்டிகையான வைசூரி, நெய் சொட்டும் பண்டிகையான சீதபேதி, கண்டவரைக் கருவுகிற பண்டிகையான இருமல், மூக்கிசை தேர் இழுக்கும் பண்டிகையான மூல ரோய்—முதலியவைக ளெல்லாம் கூடிக்கொள்கிற மாதமும் இதுவே. இதன் நடுவே புறப்படுகிறார்களய்யா—பூசாரிகளும், உடுக்கைக்காரர்களும், நாட்டுப் புறத்துக் கோடங்கிகளும், குறிகாரிகளும, மருள் பிடிததவர்களும், அங்காளம்மன்-கங்காளம்மன் -நாகம்மன் முதலிய வேஷக்காரிகளும், வேப்பிலைக்காரிகளுமாக! இது ஒரு பெரிய அமளி 'குமளி' யாகிறது.

இன்னொரு பக்கம் அம்மன் கோவில்களி லெல்லாம்—ஆடு வெட்டுகிறேன், கோழி வெட்டுகிறேன், அங்காளம்மா தாயே என் வயிற்று நோயைத் தீர்த்துவிடம்மா —மங்க மாரி தாயே—என்று அது ஒரு பெரிய கும்பிடும் கோஷ்டமுமாகிறது. இதன் நடுவிலே வேப்ப மரங்களுக்கெல்லாம் சனியன் பிடித்து மரங்களெல்லாம் மொட்டையாடப்படுகிறது. மொத்த பாகத்துக்கு இந்த ஆடி மாதம் வெகு பரபரப்புள்ள ஆத்திரமான மாதம் தான். இந்த மாதத்தில் சீர் வரிசை சரியாகச் செய்யாத பெண் வீட்டாருக்கு வேண்டிய திட்டுகள் ஏராளமாய்க் கிடைக்கும். இது ஐப்பசி மாதத்திய தீபாவளி அழைப்புக்குப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் அனுப்பாமல் தடுத்து விடவும் செய்யும. ஆண கலியாணத்துக்கு அந்த ஆயுளிலே முதல் வருஷத்திலேதான் எல்லா அழைப்புமானதால், ஆடிக்கும், ஐப்பசிக்கும், அடுத்து வரும் பொங்கலுக்கும் ஏதோ ஆன வரையில் கஷ்டத்தைக் கருதாது செய்துவிடப் பார்க்காமல், அதிலே செட்டுச் சிக்கனம் காண்பிப்போரைப் பிறகு சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கிற முதற் கலகத்துக்கு விதை போடும் மாதமும் இதுவே. இப்படியாக ஆடி மாதத்தின் அழகு கதையை விகடன் நினைக்கப் போக, அது வெகு வெகு வேடிக்கையும் மிகு மிகு ஞானமுமாய்ப் படவே, அவற்றிலிருந்தும் என் விகடக் குழாங்களும் அன்பர்களும் கிரகித்துக் கொள்ளக் கூடிய கருத்துகள் இருக்குமென்று தோன்றி, அவற்றை அப்படியே உங்கள் முன்பு கொட்டியளந்து விட்டேன். நீங்களும் கிட்டி எட்டிப் பிடித்துக் கருத்து அறிந்து கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

# பெண்கள் பக்கம்

துருக்கி-நடத்திய பெரும் யுத்தத்திற்குப் பின்பு, தலைவராகிய முஸ்தாபா கமால்பாட்சாவினால் வெகு தூரம் பழய வழக்கங்களை உதறித் தள்ளி முன் சென்றிருக்கின்றது. யுத்தத்திற்கு முன்பு கோஷா ஸம்பிரதாயம் துருக்கியில் அதிக ஆழமாய் ஊன்றியிருந்தது. இப்பொழுதோ எவ்வித மூடு மறைப்புமின்றி ஸ்வதந்திரத்தோடும் தெருவில் நடந்து செல்லும் பெண்மணிகளைக் காணலாம். புமான்களுடன் ஸ்திரீகள் தாராளமாக வெளியில் வந்து உலாவச் செல்லுகின்றனர். கோஷாவுக்குள் இருந்த சிறுமிகள் இப்பொழுது நிற்பயமாய் பாடசாலைகளுக்குத் தனித்துச் செல்லுகின்றனர். நெடுங்கால வழக்கம் வெகு துரிதத்தில் மாற்றப்பட்டுப் போனது ஆச்சரியகரம, தேசத்தில் உண்டான பரபரப்பும், விழிப்பும், பிரக்ஞையுமே அதற்குக் காரணங்களென்னலாம். அன்றியும், அரசாங்கமும் ஜனங்களின் மதமும் ஒன்றாய் இருக்குமிடங்களில் இவ்வகையான ஸமூக சீர்திருத்தம் சுலபத்தில் நிறைவேறக் கூடியதுதான்.

***

இதே விஷயத்தில் இந்தியாவை எடுத்துக்கொண்டால், தூர்க்கியில் எற்பட்ட ஸமூக சீர்திருத்தம், கோஷா நீக்கம் முதலியன இங்கு சாத்தியமல்ல. தூர்க்கிய மாதர்களுக்கு உண்டான விழிப்பும், சுதந்தர தாகமும் இங்கு இஸ்லாமியப் பெண்மணிகளின் நெஞ்சிலே இன்னும் குடிபுகவில்லை. பிரதமத்தில் ஆடவர்கட்கே அந்த உணர்ச்சி இன்னும் சரியாக உதிக்கவில்லை. போதிய கல்வியுமில்லை. இவ்வாறான நிலையில் தெளிதல், உணர்தல், உணர்ச்சி மிகுதல், ஸமூகத்தைக் கால பக்குவத்திற்கேற்ற வண்ணம் அமைத்துக்கொள்ளுதல் முதலிய சுபலக்ஷணங்கள் தோன்றுவது எவ்வாறு கூடும்? மேலும், துருக்கிக்குப் பொருந்தியது இந்தியாவுக்குப் பொருந்தாமலும் போகலாம். நெடுங்காலமாய் ஊன்றி வந்துள்ள ஸமபிரதாயங்களைத் திடீரென மாற்ற முயல்வது ஸமூகத்திற்கே ஆபத்தாக முடியும். ஆயினும், அவற்றுள்ளே சிற்சில இன்றியமையாத திருத்தங்கள் செய்துகொண்டு செல்வதில் தவறில்லை. இங்ஙனம் சிறுகச் சிறுகச்செய்து பல துளி பெருவெள்ளமாகும்படி பார்க்கலாம். சிறுகத் தின்றால் மலையத்தனையும் தின்றுவிடலாமென்பது லோக வசனம். ஆரம்பத்தில் செய்யப்படும் சிறு திருத்தங்களே பிந்திய விசாலித்த பெரிய திருத்தங்கட்கு உதவியாக நிற்பன.

***

துருக்கி கோஷா ஸம்பிரதாயத்தை விட்டுவிடப் பழகிக்கொண்டது போல், நம் நாட்டில் அதைத் தழுவி வேறொரு சீர்திருத்தம் செய்வோம். நமது முஸ்லிம் ஸகோதரர்கள் தங்கள் சிறுமிகளுக்கு 12-வயது வருமளவும் கோஷா ஸம்பிரதாயம் இல்லையென்று ஒரு முடிவு கட்டிவிடவேண்டும். வாய்க்குள் முணு முணுப்பதிற் பயனில்லை. வாய்விட்டுப் பேசவேண்டும். இவ்விதம் தீர்மானித்து அந்தப் பன்னிரு பிராயத்துக்குள் சிறுமிகள் வித்தையில் தேர்ச்சி பெறுமாறு பாடசாலைகளுக்கு அனுப்பி ஊக்கத்துடன் முயற்சிக்கவேண்டும். இவ்விதம் நம் முஸ்லிம் ஸகோதரர்கள் அனைவரும் ஏக மனதாய் ஒரு தீர்மானம் செய்துகொண்டு தொடங்குவார்களாயின்,

பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு அந்த ஸமூகத்தின் அபிவிர்த்தியே புதுவிதமாக மாறிவிடும். எதுவும் முன்னின்று செய்தால்தான் ஆகும். வீண் வாய்ஞானத்தில் காரியமில்லை. பெண்மணிகளை இருட் குகைகளிலே தள்ளிவிட்டு, ஆடவர்கள் மட்டும் முன்னுக்கேறிவிடப் பார்க்கிற முயற்சி எந்த நாளிலும் பலிக்காது, ஜொலிக்காது. ஒரு தேசத்தின்—ஸமூகத்தின்—அபிவிர்த்தி பெண்களைப் பொறுத்திருக்கின்றது. பெண்களுடைய அபி விருத்தி அவர்களுடைய கல்வியையும் ஞானத்தையும் பொறுத்திருக்கின் றது.

***

நமது நாட்டுப் பெண்மணிகள் தீபமேற்றப்படாத விளக்குகளுக்குச் சமானமாயிருக்கிறார்களென்று ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் கூறுகின்றார். இந்த உவமானம் வெகு பொருத்தம். நமது 'பெண் தெய்வ'ங்களுக்கு நாம் சரியானபடி கடமை செய்யவில்லை. அவர்களை அலங்காரமான வெறும் விளக்குகளாக மட்டுமே வைத்திருக்கிறோம். அத் திருவிளக்கிலே அறிவாகிய நெய்யை ஊற்றவில்லை. விவேக பக்குவத்தையும் விழிப்பையும் திரியாகத் திரித்து அதில் போடவில்லை. இவ்விரண்டும் செய்து தீபம் ஏற்றினாலன்றோ அபிவிர்த்திச் சுடர்தோன்றி அஞ்ஞானாந்தகாரத்தை யோட்டி எங்கும் ஸ்வதந்திர ஜோதியை வீசவைக்கும். நன்கு கற்றவர்களி லேயே சிலர் தங்கள் சிறுமிகளைச் சிரத்தையோடும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதில்லை. இரவில் தங்கள் குமாரத்திகளிடம் பாடம் கேட் டுக் கற்பித்துக் கொடுப்பதுமில்லை. நன்கு கற்ற புமான்களின் சங்கதியே இவ்வாறானால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்ல?

## II

ஸ்திரீகளின் ஸ்வபாவத்தைப்பற்றி ஒரு நிபுணர் எழுதியுள்ள ஆராய்ச்சி வியாசத்தில் பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன:—

—"ஸ்திரீகள் சாதாரணமாகப் பொல்லாதவர்களா யிருப்பதில்லை. ஆனால், பொல்லாத்தனத்தில் இறங்கிவிட்டால் ஆண்களைவிட மோசம்."

—"தன்னைவிட்டு வேறொருத்தியை மிகவும் இச்சித்து நிற்கின்றா னென்ற விஷயத்தில் தன் கணவன் மீது ஒரு ஸ்திரீக்கு உண்டாகும் ஆத்திரம் கொலையிலும் முடியலாம். இவ்விதமே தன் காதலைத் திரஸ்கரித்த வனைத் தொலைத்திடவும் துணியலாம்."

—"ஒரு ஸ்திரீ கொடுமை செய்வதென்று வந்துவிட்டால் அது மகா கோரமாக இருக்கும்."

## III

நமது ஹிந்துச் சிறுமிகளுக்கு ஏற்ற ஹிந்து உபாத்யாயனிகள் கிடைப் பது கஷ்டமாய் இருக்கிறது. கிறிஸ்து மத உபாத்யாயனிகளே இப் பொழுது பெரும்பாலுமிருந்து கற்பித்து வருகிறார்கள். இதில் பிரதமத் தில் ஹிந்துமத ஆசாரணைகள் கொலைசெய்யப்பட்டுப் போகின்றன. ஹிந்து மாதர்களின் அடக்கமான வாழ்வைப்பற்றி அச்சிறுமிகளுக்கு ஏதும் போதிக் கப்படுவதில்லை. கிறிஸ்துவ உபாத்யாயனிகள் தாங்கள் கற்றுக்கொண்டிருக் கும் ஆங்கில மாதர்களின் ஆசாரணைகளையே ஹிந்துச் சிறுமிகட்குக் கற்றுக் கொடுக்கின்றனர். பின்னும் இவ்வுபாத்யாயனிகள் தாங்கள் இந்தியாவில்

பிறந்தவர்களாக நினைப்பதில்லை. ஐரோப்பியர்களாக ஜெனனமெடுக்காமற் போனதைப்பற்றி அவர்களுக்கு மகா துக்கம்! இத்தகைய மனோபாவமுள்ளவர்களின் வசம் ஹிந்துச் சிறுமிகளது மகா விலையேறப் பெற்ற அதி பால்யகாலத்தை ஒப்புவிக்கப்படுகின்றது. ஹிந்து மதத்தைப் பழிப்பதற்கான போதனையை முதலாவதாகப் படித்துக் கொள்கிறார்கள். தாய் தந்தையர்களை அநாகரீக மிருகங்களென்று பிறகு படிப்பின் மூலம் தெரிந்து கொள்கிறார்கள். ஸ்வயேச்சையான வாழ்க்கையைப்பற்றி ஸதா சிறுமிகளுக்குப் போதிக்கப்படுகின்றது. ஹிந்து மதத்தில் ஸ்திரீகள் அடிமை வாழ்க்கை நடத்துவதாக நித்தியப் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. இத்துடன் ஒழிந்தனவா? ஐரோப்பிய நடையுடை பாவனைகளில் நம் சிறுமிகள் தேறும்படி பயிற்றுவிக்கப்படுகிறார்கள். மார்பகத்தின் மேல்பகுதியில் கால்பாகம் தெரியும்படியான மஸ்லின் ரவிக்கையிட்டு அதன் மேல் உட்புறமெல்லாம் தெரியக் கூடிய ஸல்லா ரவிக்கையை இட்டுக்கொள்ளும்படியும், இன்னும் அநேகவித ஐரோப்பிய ஸம்பிரதாயங்களையும் கற்பித்துக் கொடுக்கின்றனர்.

***

பழய காலங்களில் சேலையின் நுனியை இடுப்பிற் சொருகி அங்க முற்றும் மறைத்துக்கொள்வது வழக்கம். அது இப்பொழுது அநாகரீகமாகிவிட்டது. சேலையின் நுனி தொங்கிக்கொண்டு காற்றுக்கு ஊசலாடுகின்றது. சில சமயங்களில் மார்பகத்தைவிட்டு அப்பால் விலகி அன்னிய தேசம் போய்விடுகின்றது. அநேகமாய் மார்பகம் ஒரு புறம்மட்டுமே மறைக்கப்பட்டு மற்றொரு புறத்தைப்பற்றிக் கவலையே கொள்வதில்லை.

***

முன்னாட்களில் தலை சீவி வாருகையில் உதிரா நத ரோமங்களை ஒன்று சேர்த்து சிறு கயிறாகப் பின்னி அதை ஜடைக்குக கட்டிக்கொண்டனர். இப்பொழுதோ ஜடையின் முடிவில் பட்டு நாடாக்கள் பரிமளிக்கின்றன. உத்தமமான மஞ்சள் பூச்சுப் போய், சோப்பும் வாசனைப் பவுடர்களும் கொஞ்சுகின்றன. இந்த அனுவசிய நாகரீகங்களைத் தான் கிறிஸ்துவ உபாத்தியாயனிகள் பாடசாலையில் போதிக்கின்றார்களே தவிர, செட்டும் சிக்கனமுமான அடக்கமுள்ள வாழ்வைக் குறித்து எவ்வித போதனையும் நிகழ்த்தப்படுவதில்லை. சிறுமிகளுடைய பாடசாலையின் காலமோ வெகு சொற்பம். அந்த சொற்பமும் நல்லொழுக்கத்தின் விளக்கமற்ற ஆடம்பர வாழ்க்கைப் பயிற்சிக்கே செலவிடப்படுவதாகில், ஸ்திரீ வித்யாப்யாஸம் முன்னுக்கு வந்து சிறந்து ஓங்குதலெங்கே? கிறிஸ்துவ உபாத்யாயினிகளிலும் சற்குணலயங்களான சிலர் இருக்கிறார்களென்றாலும், பெரும்பான்மையான சங்கதி மேற் சொன்னவாறு தான். ஸ்வமத போதனையில்லாத எந்தக் கல்வியும் நன்மையைச் செய்யாது. கிறிஸ்துவ உபாத்யாயனிகளின் மீது நாம் குறைகூறவில்லை. ஹிந்துக்களின் மீதே இக்குற்றத்தை ஏற்றுகிறோம்.

***

ஹிந்துக்களின்மீது மட்டும் நாம் குற்றம்கூற வரவில்லை. பொதுவாக எல்லோருக்குமே எச்சரிக்க விரும்புகிறோம். அந்தந்த மதஸ்தர்களைக் கொண்டு அந்தந்த மதச் சிறுமியர்கட்குக் கல்வி பயிற்றுவித்தலே உத்தமமும் நன்னெறியுமாகும். சிறுவர்களுடைய கல்வி வேறு; சிறுமியர்களின்

கல்வி வேறு, சிறுவர்களுடைய கல்விக்குப் பல மதஸ்தர்கள் வரட்டும், போதிக்கட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், சிறுமியர்களின் கல்வியிலோ குடித்தனப் பழக்கம் முதலியனவும் தொடர்ந்து செல்லுதலால் நாம் மிகவும் விழிப்புடனும் எச்சரிக்கையோடும் தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும். நாம் எதை அல்பமென்றும் அசிரத்தையோடு கவனியாமல் இருக்கிறோமோ அதில்தான் பெரிய விபத்துகள் இருக்கின்றன. ஸமூக முன்னேற்றத்தைத் தடைபடுத்துவதற்கும் அந்த "அல்ப"த்துக்கு அதிக சக்தியுண்டு. சிறிய பாம்பானாலும் பெரிய தடிகொண்டு அடிக்கவேண்டுமென்பது பழமொழி.

## IV

கல்வி கற்ற பெண்களால் புருஷர்களுக்குப் பரம ஸுகமுண்டு. பிடிவாதம் என்னும் குணம் ஸ்திரீகட்கு இயற்கை யாதலின், எந்தக் காரியத்தையும் ஸாதிக்கும் திறமை அவர்களுக்கு விசேஷமாய் இருக்கிறது. இந்தப் பிடிவாத சிந்தையை உத்தம மார்க்கத்தில் கொண்டு நல்வழியில் நடப்பதற்கு அவர்கள் பயிலும் கல்வி பெருந்துணையாக நிற்கும். கல்வியறிவில்லாத ஸ்திரீகள் தங்களை யலங்கரித்துக் கொள்வதிலும், தங்கள் வயிற்றைப் பக்ஷிய போஜ்யங்களால் நிரப்பிக்கொள்வதிலும் காலத்தைக் கழிப்பர். உத்தம வித்தையை அப்யஸித்த வனிதாமணிகள் ஸகல ஸுகங்களும் தங்களின் புருஷர்களாலேயே கிடைக்கத்தக்கவை யென்று தெளிந்து அவர்களை ஈசுவரனாகப் பாவிதது. அவர்கள் பொருட்டு ஸர்வோபசாரங்களையும் செய்வர். தாங்கள் சிரமப்படுவதே யன்றி, தங்களின் பர்த்தா சிரமப்பட மனம் ஸகியார். ஒரு ஸமயம் தங்களின் பிராணபதியை விட்டுப் பிரிந்து வெகு தூரத்திலிருக்க நேரிடினும் கடிதங்களின் மூலமாய்த் தங்களின் பிரேமையைத் தெரிவித்து, ஸதா அப்புருஷரின் இருதயத்தில் தங்களின் உருவம் நர்த்தனம் செய்யும்படி நடந்துகொள்வர். எத்தனையோ விதமான ஸுகங்கள் ஸதிபதிகளுக்காகவே ஏற்பட்டிருப்பதால் அவ்வளவையும் அடைந்தனுபவிக்கக் கல்வி அத்யாவசிய மென்போம். எவனுக்குக் கல்வி யறிவுள்ள மனைவி கிடைக்கிறாளோ அவனே பாக்கியவான். படிப்பற்ற ஸ்திரீகளுடன் ஸகவாசம்செய்வது காட்டு மிருகங்களோடு பழகுவதற்குச் சமானமாம். இந்தத் துரதிஷ்டம் புமான்களுக்கு வாய்க்காதிருக்குமாறு சிறுமிகள் அனைவருக்கும் வித்யாப்பியாஸம் செய்வது அவசியத்திலும் அவசியமாம்.

## V

1. பெண்மணியே! உன் பதியே உன் பிராணன், உன் வாழ்வு, உன் சம்பத்து. அவருக்குத் தக்கபடி நடந்துகொண்டால் அதைவிட வேறு தர்மம் உலகத்திலில்லை.

2. குழந்தைகளே உன் ஆஸ்தி. தேடிய பொருளை ஸத்விஷயத்தில் விநியோகப்படுத்துவதுபோல, உன் மக்களையும் அறிவில் வல்லோராக்கி ஸத்போதனைகளின் வழியிலே அவர்களை நடத்து.

3. உன் இனிய கணவனார் வசிக்கும் குடிசையே, அரண்மனையிலும் உயர்ந்ததாகும். அரண்மனை எத்தனை அழகுடன் கூடியிருப்பினும் அது கண்காட்சிக்கு மட்டுமே உதவும். இவ்விதமே உன் தாய் வீடும் உனக்கு

இரவல் வீடுதான். ஆனால், உன் கணவனின் குடிசையோ உனக்குச் சொந்தமான வீடாகும். அவ்வீட்டிற்கு நீயே தலைவி. இது என் வீடு என்று சொல்லிக்கொள்கிற ஸ்வாதீனம் கணவன் வீட்டில்தான் உனக்கு உண்டு.

4. சகிப்பும் வாயடக்கமும் பெண்களுக்கு மகா பெரிய ஆபரணங்களாகும்.

---

சென்றகாலம் திரும்பிவருமா? ஐசுவரியவான்களுக்குள் வரையறையில் நின்று செலவு செய்யாமல் ஆஸ்தியை இழந்துபோகிறவர்கள் அநேகர்; காலத்தை வீண் செலவினால் போக்குவோர் அதிலும் அநேகர். இந்த ஒரு நிமிஷத்திலே என்ன செய்துவிடப் போகிறோம்? இந்தக் கால்மணி நேரத்தில் என்ன ஆகப்போகிறது என்று ஒரு நாளைக்குள்ளே எத்தனையோ நிமிஷங்களையும் கால்மணிகளையும் வீண் போக்கிவிடுகிறார்கள். சோம்பல் எவ்வளவோ காலத்தை நாசம்பண்ணுகிறது; நாற்காலியில் சாய்ந்து கொட்டாவி விட்டுக்கொண்டு இப்போது என்னத்தைச் செய்கிறது, பிற்பாடு பார்த்துக்கொள்வோம் என்று சொல்லும் படித்த சோம்பேறிகள் எத்தனையோ பேர் உளர். இது ஒரு பெருந் துர்க்குணம். இது அறிவுக்கும் கெடுதி, வேலைக்கும் தடங்கல். எந்தவேலை எப்போது வருகிறதோ அப்போதே அதைச் செய்துவிட வேண்டும்.

ஒன்றும் செய்யாமலே நம்முடைய நாட்கள் கழிகின்றன; எது காரியமோ, எது நாம் செய்யவேண்டிய கடமையோ அதைச் செய்யாமலே காலத்தைக் கழித்துவிடுகிறோமென்று ஒரு பெரிய வித்துவான் சொல்லியிருக்கிறார். மனிதனுடைய ஆயுள் நாள் மிகவும் அற்பம் அற்பமென்று கூறுகிறோம்; அந்த நாளைச் செலவழிக்கும் மாதிரியைப் பார்த்தால் அதற்கு முடிவே யில்லையென்று நினைக்கும்படியா யிருக்கிறது. செலவழிந்த பணத்தை மீட்டும் சம்பாதிக்கக் கூடினும் கூடும். வீணே விரயம் செய்த காலத்தை மீண்டும் பெறுதல் என்றேனும் கூடுமோ?

***

நோயாளிகளுக்கு இதம்பண்ணுதல். எப்படிப்பட்ட நோய் வந்திருந்தாலும், மனவெழுச்சியும் தைரியமு மிருந்தால் பாதி வருத்தம் நீங்கும். அருகேயுள்ளவர்கள் நோயாளிகளை எவ்வளவுக் கெவ்வளவு உபசரித்துத் தேற்றுவார்களோ அவ்வளவுக்கவ்வளவு நோயின் வருத்தம் தீர்ந்ததுபோலாகிவிடும். அன்புற்றவர்கள் சொல்லும் இனிய மொழிகளைக் கேட்பதனால் நோயாளிகளின் வருத்தமும் ஒருவாறு தணியும். வேண்டியவர்கள் நோயாளிகளா யிருப்பவர்களைப் போய்ச் பார்ப்பதனாலேயே நோய் சற்றே குறைவு பட்டதுபோலாகும். நோயாளிகளை வீணாய் அதைரியப் படுத்துவதனாலே தீமையேயன்றி வேறில்லை. நோய் கொண்டவர்களிடத்தில் மற்றவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு அன்பு பாராட்டுவார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் கொண்ட நோய் நீங்கி எளிதில் சவுக்கியம் எய்துவர். இதை அநுபவத்தில் கண்டதுண்டா?

---

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(131-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

15. அண்ணனிடத்தில் ஆறுமாதம் வாழ்ந்தாலும் அண்ணியிடத்தில் அரை நாழிகை வாழலாமா?

16. அண்ணன்தான் கூடப்பிறந்தான், அண்ணியும் கூடப்பிறந்தாளா?

இவ்விரு பழமொழிகளும் அன்பின் காரணமாகத் தோன்றியவை. இவற்றின் கருத்தும் ஒன்றே. அண்ணன் வீட்டில் ஆறுமாதமும் இருக்கலாம். அதற்கு மேலும் இருக்கலாம். எவ்வளவு எளிய நிலைமையிலும் அண்ணன் தங்கை சம்பந்தம் விட்டுப் போகக்கூடியதல்ல. தங்கைக்கு என்று அண்ணன் ஒரு புதிய மரியாதை உபசரிப்பு வைத்துக்கொள்ளப் போவதில்லை. வீட்டோடு வீட்டுப் பெண்ணாய்த் தங்கை இருக்கிறாள். அவள் இவ்வளவு சாதம் புசிப்பது அண்ணனுக்கு ஒரு பாரமாய் விடாது. உள்ளே உடற்பிறப்பின் பாசமும் அன்பும் ததும்பி நிற்பதால் தங்கைக்குச் செய்யும் செலவை ஒரு செலவாக அண்ணன் நினைக்க மாட்டான். இருவர் மனமும் ஒன்றுபட்டு நிற்பதால் எவ்வித பேதமும் இல்லை. ஆகவே, அண்ணனிடம் எத்தனை நாள் இருந்தாலும் அண்ணனுக்கு அது ஒரு சுமையல்ல. நெஞ்சுக்குள்ளே அன்பு இருக்கிற வரையில் எதுவும் ஒரு பாரமாகத் தோற்றாது தான். கூழ் குடிப்பதாயிருந்தாலும் அண்ணனும் தங்கையும் சந்தோஷமாய்ப் பங்கிட்டுக்கொண்டு குடிக்கலாம். ஒருமித்துப் போன மனதுக்கு எவ்விதமும் இருந்து கொள்ளலாம். அது ஒரு குற்றமாகவும் படாது. மரியாதைத் தாழ்வாகவும் தோன்றாது. தன் கணவனின் இல்லத்தில் வடை பாயஸத்துடன் உண்ணும் பெண்ணாயினும், ஏழையான தன் அண்ணன் வீட்டிற்கு வந்தால், அங்குள்ள கேவலமான போஜனத்தில் குற்றம் சொல்லாமல் தன் தாய் வீட்டுச் சாதம், தன் அண்ணன் வீட்டு அன்னம் என்று மனத் திருப்தியோடும் சந்தோஷமாகவுமே புசிப்பாள். தான் வந்திருப்பதற்கு அதிகப்பட்ட செலவுகள் எதுவும் செய்ய வேண்டாமென்று அண்ணனுக்குச் சொல்லி, உள்ளதை அமிர்தமாய்ப் புசித்து ஆநந்தமாய் இருப்பாள். தான் அண்ணன் வீடு சென்று வந்ததைத் தான் புகுந்த வீட்டில் ஒரு கௌரவமாகச் சொல்லிக்கொள்வாளே தவிர, அண்ணனுடைய உள் வீட்டின் இளக்காரத்தையும் கேவலத்தையும் நித்திய தரித்திரத்தையும் ஒருபோதும் வெளியிட்டுக் கொள்ள மாட்டாள். அவ்வளவுக்கு அண்ணனும் தங்கையும் ஒருமித்துப் போவதற்கு அவர்களின் உள் மனத்தில் இருக்கும் நிஷ்களங்கமான அன்பே காரணம். ஆதலின் அண்ணனிடத்தில் ஆறு மாதமும் இருக்கலாம், அவனையே அடைக்கலமாகவும் நம்பி வந்தும் விடலாம். இதில் அண்ணக்கு ஸந்தோஷமே தவிர சலிப்பு இராது.

ஆனால், "அண்ணியிடத்தில் அரை நாழிகை வாழலாமா?" என்பது கேள்வி. எப்படி வாழமுடியும்? அண்ணனுக்குத் தன் உடன் பிறப்பு

என்ற வகையில் இருக்கும் அன்பு, தூர இருந்து வந்த அன்னியஸ்தனான அண்ணிக்கு எப்படி யிருக்கும்? பிரியம்—அன்பு என்பவை பிறரது கட்டா யத்துக்காகக் கொள்ளுபவை யல்லவே? தனக்குத்தானே உண்டாகிப் பெருக் கடைவதற்கன்றோ அன்பு என்று பெயர். அண்ணன் காட்டும் அன்பு அண்ணி காட்ட முடியுமா? முடிந்தாலும், தன் கணவனின் கோபத்துக்கு அஞ்சி உபசரிப்பதாக அது இருக்குமே தவிர, உண்மையான உள்ளத் தோடும் பிரீதிப்பதாக இராது. மேலும் தன் வீடு-தன் வாசல் விருத்தி யடையவேண்டு மென்றும், செலவுகள் செட்டாய்ச் செய்து செல்வம் சொத்து சேர்க்க வேண்டுமென்றும் ஒவ்வொரு அண்ணிக்கும் நினைவு உண்டாவது சகஜம் தான். அவ்விதமாக சிக்கனமும் செட்டுமாய்க் குடித் தனம் நடத்துதற்கு இல்லாமல் தன் கணவனைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி தன் வீட்டில் கூட்டம் போட்டுக்கொண்டு இருப்பதானால், அது அண்ணிப் பொம்மைக்குச் சகிக்க முடியாத கஷ்டமாகத் தான் இருக்கும். தன் கணவ னின் தங்கை தான் புகுந்த வீட்டில் சண்டையிட்டுக் கொண்டு வந்து குந்திக் கொள்கிறாள். தன் கணவனோ தன் தங்கைப் பக்கமாக நின்று, இனி அங்கு போகாதே, என்னிடமே இரு, ஆகிறதைப் பார்ப்போம் என்று தன் வீட்டில் நிறுத்திக் கொள்ளுகிறான். அது அவனுக்கு ஒரு கனமாக இல்லை. ஆனால் அண்ணிப் பொம்மைக்கோ அது ஒரு பெரிய தலைப்பாரமாக இருக் கிறது. இதென்ன இவள் வந்து குந்திக்கொண்டாள்; நாலு காசு சேர்த்து வைத்து நகை 'நட்டு' செய்து கொள்ளலாமென்று நினைத்ததெல்லாம் வீணாயிற்றே; இவள் எப்போது தொலைவாளோ, வீடு எப்போது உருப் படுமோ என்று ஆத்திரப்பட்டுக் கொள்ளுகிறாள். இதென்ன வாழ்கிற வீடா, பாழாய்ப்போகிற வீடா, வந்த பணமெல்லாம் குந்திக்கொண்டிருக் கிறவர்களின் இழவுக்குச் செலவாய் விடுகிறதே. சம்சாரி குடித்தனமாயிற்றே, அவளும் வாழவேண்டுமே என்கிற எண்ணமிருந்தால் இப்படி வந்து குந்து வார்களா? எத்தனை நாளைக்குக் குந்த வைத்துக்கொண்டு போடுவது என்று அண்ணிப்பொம்மை தன் திருவாயைத் திறந்து கொள்கிறாள். இவ்வளவுக் கும் காரணமென்ன? அண்ணிப்பொம்மை அன்பில் சம்பந்தம் பெறாத தூரத்துப் பொம்மையாக இருப்பதால்தான். அதனால் தன் கணவனைச் சேர்ந்தவர்கள் வந்தால் அது அவளுக்கு ஒரு பெரும் பளுவாகத் தோற்று கிறது. ஐயோ! வீண் செலவாகிறதே யென்று துடிதுடிக்கிறாள்.

இதே விஷயத்தில், அந்த அண்ணியாகிய கிண்ணியின் தாய் வீட் டைச் சேர்ந்தவர்கள் அவள் வீட்டிற்கு வந்தாலோ அப்போது எல்லாம் வேறொரு புதிய மாதிரி. உடனே நெய்யும், பாலும், காபியும், பக்ஷணங்களும், பல வகைக் காய் கறிகளுடன் போஜனாதிகளும் சித்தமாய் விடுகின்றன. எத்தனை நாட்கள் அவர்கள் இருந்தாலும் அது "கிண்ணி"க்குப் பாரமாகத் தோற்றுவதே யில்லை. அந்த இந்த பண்டிகை, உத்ஸவம் வருகிறது, அது வரையும் இருந்துவிட்டுப் போங்கள் என்று தன்னவர்களைக் கெஞ்சி இன் னும் பல நாளைக்குத் தன்னிடமே இருக்கும்படி செய்துகொள்வாள். தன் கணவன் என்னதான் அதிகமாகவே வீட்டுச் செலவுகள் வாங்கிவந்து போட் டாலும் இதுபோதுமா, இன்னும் கொஞ்சம் வாங்கிவரக்கூடாதா வென்று சலித்துக்கொள்வாள். காலையில் ஏழுமணிக்குப் புருஷன் எழுப்ப, அதற்கு மேல் எழுந்திருக்கிற 'கிண்ணி' இப்போதோ விடிய ஐந்துமணிக்கே எழுந்துகொண்டு வேலைசெய்யத் தொடங்கிக்கொள்கிறாள். காலையில் பாத்

திரங்கள் துலக்குவதானால் அதிக நேரமாய்விடுமென்று நேற்றிரவேயே எல்லா பாத்திரங்களையும் சுத்திசெய்து வைத்துவிடுகிறாள். நாளைக்கு என்ன குழம்புவைக்கலாம், என்ன பக்ஷணம் செய்யலாம் என்பதிலேயே இரவு முற்றிலும் "கிண்ணி"க்கு விசாரம். அதையே கனவிலும் காண்டாள். காலை 6, 6½ மணிக்கெல்லாம் சிற்றுண்டி தயாராய்விடும். பாழும் பாவி, பால்காரி இன்னும் வரவில்லையே, மணி, ஆகிறதே என்று காப்பிக்குப் பால் விடத் துடித்துக்கொண்டு பாற்காரியை எதிர்பார்த்தபடி நிற்பாள். தன் கணவன் இந்த செலவுகளுக்கு எங்கே சலித்துக்கொள்வாரோ வென்று உள்ளுக்கு ஒரு பக்கம் உதைப்புடனே, தன் கணவனைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக சிற்றுண்டி பலகாரங்களில் அதிக நெய் விட்டும், காபியில் அதிக பால் விட்டும் தன் கணவனிடம் கொண்டுபோய் வைத்து வெகு பிரியமாய் அவனை உண்ணும்படி உபசரிப்பாள். அப்போது இந்தக் "கிண்ணி"யம்மாள் தன் கணவனிடம் காட்டும் பிரியமும் பக்ஷமும் புன்னகை யொளிர்வதனமும் எந்தநாளிலும் அந்த கணவன் கண்டிராத புதிய"மோஸ்த"ராக இருக்கும். இந்தப் பலகாரமும் காப்பியும் தனக்கு என்னவோ இலவசத்தில் கிடைத்ததாக அந்த "இளிச்சவாய்"க் கணவனும் நினைத்துக் கொண்டு, தன் மனைவியின் மயக்கு அன்பிலே பரவசப்பட்டுப்போகிறான். தன் மனைவியைச் சேர்ந்தவர்களே தனக்குப் பிற்காலத்தில் துணைவர்களாக இருக்கக்கூடு மென்றும், தன்னைச் சேர்ந்த பந்துக்கள் எல்லாம் வஞ்சக மனத்தினர்க ளென்றும் என்னென்னவோ எண்ணி தன் மனைவியைச் சேர்ந்தவர்களை வெகு மேலாக உயர்த்தித் தன் மனக் கோட்டைகளைப் பெருக்கிக் கொள்கிறான். இவ்விதம் அந்தக் "கிண்ணி ஆத்தாள்" தன் கணவனைத் தூபம் போட்டுச் சரிசெய்து கொண்டு தன்னைச் சேர்ந்தவர்களை உபசரிக்கிறாள்.

இதிலே, ஆகும் செலவின் பெருக்கைக் கண்டு வீட்டுக்காரன் சற்றே மனம் சலித்தாலோ, அவன் மனைவிக்கு வந்து விடுகிறது முகச்சுளிப்பு! "ஆமாம் என்னைச் சேர்ந்தவர்கள் இரண்டு நாளைக்குவந்து இருந்து போவதென்றால் அது உங்களுக்குச் சலிப்பாகத் தான் இருக்கும்; உங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை மாதங்கள் வரையில் உட்கார்ந்து தின்று அழித்தாலும் அது உங்கள் புத்தியில் படாது; என்னவோ வெட்கம் கெட்டு மானம்விட்டு நான் ஒருத்தி யிருக்கிறேனே யென்று தவறி வந்து விட்டார்கள்; வந்தவர்கள் இந்த வீட்டு லக்ஷணத்தைக் கண்டு நகைக்காமல் போகவேண்டுமே யென்று இரவு பகல் உழைத்து எவ்வளவோ பாடுபடுகிறேன்; அதற்காகவா நீங்கள் இப்படிச் சலித்துக் கொள்ளுகிறீர்கள்; முகம் சுளித்துக் கொள்கிறீர்கள்; அன்றைக்கே அவர்கள் போய்விடுகிறவர்கள்; வந்தவர்கள் வந்தார்கள், இன்னும் இரண்டு நாளைக்கு இருந்து போகிறதுதானே என்று நான்தான் எவ்வளவோ சொல்லி நிறுத்தினேன்; எனக்கு இந்த வீட்டில் இருக்கிற "பவிஷி"யையும் இளப்பத்தையும் அவர்கள் என்ன கண்டார்களா? சரிதான் என்று என் சொல்லுக்காக மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்பட இருந்தவர்கள் மறுபடியும் இரண்டு தினங்கள் இருக்க உட்கார்ந்தார்கள்; அதற்கு நீங்கள் இப்படி ஆங்காரப் படுகிறீர்கள்; எனக்கு இந்த வீட்டில் என்ன சுதந்திரம் இருக்கிறது? தாலியறுத்த ஒருத்திக்கு இருக்கிற பாத்தியம்கூட எனக்கு இல்லை. நாளைக்கே அவர்களைப் போகச்சொல்லி விடுகிறேன்; பாவம் என்றாலும் என்னைச் சேர்ந்த

வர்களாலும் உங்களுக்கு என்னத்திற்குக் கஷ்டம்?—என்று தன் ஊத்தை வாயைத் திறந்துகொண்டு கண்ணீர் வடிக்கத் தொடங்கிக்கொள்கிறாள்.

இதைக்கண்ட வீட்டுக்காரன், "இதென்ன இவள் இப்படியாய்விட்டாள், மடமடவென்று வாய் ஓயாமற் பேசுகிறாள், எவ்வளவோ செலவுகள் செய்தும், கடைகளிலெல்லாம் கடனுக்கு வாங்கிவந்துப் போட்டும், கடைசியில் பேரைக் காணோமே, போட்டானே யென்கிற வார்த்தையைக் காணோமே, சொட்டுச் சொல்லில் அல்லவோ முடிந்துபோயிருக்கிறது. இதை வந்திருப்பவர்கள் கேட்டால் என்ன நினைப்பார்கள்? அவர்களின் முன்பாக இவளால் அவமானப் படுவதா? வந்தவர்கள் வீட்டு நாற்றத்தை யறியாமல் கௌரவமாய்ப்போனால் போதும்"—என்று பல்லைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தை யடக்கிக்கொண்டு மறுபேச்சு சொல்லாமல் மவுனமாய்ப்போய்விடுகிறான். தன் மனைவியின் வார்த்தையையே ஆதரித்துப்பேசி, நீ அவர்களிடம் எதுவும் சொல்லிவிட வேண்டாம், நான் அப்படி முகம் ஏதும் சுளித்துக்கொள்ளவுமில்லை, அவர்கள் போகிறபோது போகட்டும், ஆனசெலவு ஆகட்டும் என்றும் சொல்லிவிடுகிறான். இந்த வார்த்தையை அவன் வாயிலிருந்தும் பிடுங்குவதற்குத்தான் "கிண்ணி"யம்மாள் இவ்வளவு தூரம் மாயாஜாலக் கண்ணீர் விட்டதும் மூக்கு சிந்தியதுமாதலால், தன் காரியம் வெற்றிபெற்ற தென்றெண்ணி சந்தோஷமாய்ச் சமயல் அறைக்குள் செல்லுகிறாள். வந்தவர்கள் அதற்கு மேலும் அசைவதாகக் காணோம், அதன்மேல் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கடைசியில் வீட்டுக்காரன் கேட்கப்போனாலோ, "கிண்ணி"த் தேவியார் பழயபடி கண்ணீர் கொட்ட ஆரம்பித்து, "அன்றைக்கே போகிறவர்களை நீங்கள் இருக்கும்படி ஏன் சொன்னீர்கள்; அதனால்தானே அவர்கள் இருந்தார்கள், நானும் நீங்கள் சொன்னதை உள் விசுவாசப் பேச்சாய் எண்ணிக்கொண்டு அவர்களிடம் சொல்லிவிட்டேன், அதனால் அவர்கள் இங்கு நிற்கும்படியாயிற்று, நீங்களும் இதற்கு இவ்வளவு சலித்துக்கொள்ள வேண்டாம், இன்றென்ன, வெள்ளிக்கிழமையா—அவர்கள் அடுத்த சனிக்கிழமைக்குப் பிராயாணம் நிச்சயம் செய்துவிட்டார்கள்—சீக்கிரம் போய்விடுவார்கள்-சனிக்கிழமை எவ்விதமும் தவறாது—இனி வரவும் வரார்கள்-போதும் போதும் உங்களிடம் நான் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு"—என்று பாட்டை ஆரம்பித்துவிடுகிறாள். இதைக்கேட்டு வீட்டுக்காரன் இனிமேலும் ஒரு வாரமா? எப்படியாவது புறப்படுகிற நாள் தெரிந்ததேயென்று தன்னுள் பேசிக்கொண்டு மௌனமாய்ச் சென்றுவிடுகிறான்.

இவ்வளவு சிரத்தையும் பாடுமாய்க் "கிண்ணி" யம்மாள் தன்னைச் சேர்ந்தவர்களை உபசரிப்பதேன்? தன்னவர்களென்ற அன்பால்தான். அதற்கு அப்பால் மற்றொரு ரகசிய அபிப்பிராயமு முண்டு. ஆனால் அதை வெளியிட்டால் நம்மீது கிண்ணி அம்மையார்களுக்கு கடுங்கோபம் உண்டாய்விடவும் கூடும். ஆனால் இங்கு சொல்லித் தீரவேண்டியதாக நேர்ந்துகொண்டதற்கு நம்மை மன்னிக்கவேண்டும். அதாவது தன் வீட்டுக்கு வந்த தன்னவர்களை நன்றாக உபசரித்து அனுப்பினால்தான் தனக்குக் கௌரவமென்றும், தான் ஒரு சமயம் அவர்கள் வீடுகளுக்குப்போக நேரும்போது அவர்களும் தன்னை மரியாதையாக நடத்துவிப்பதற்கு—தான் இப்போது செய்யும் விருந்து வகைகள் பெரிய துணையாக நிற்கலாமென்றும் எண்ணு

காலையில் மூன்று மணிக்கு எழுந்திருக்க நினைக்கிறவன் அதே நேரத்துக்கு எழுந்தாலும், தூக்க மயக்கத்தில் சோம்பிச் சற்றே கண்ணயர விரும்புகிறான். ஒரு நிமிஷம் மட்டும் நித்திரித்து விழித்துக் கொள்ள எண்ணுகிறான். ஆனால் முடிவென்ன? மறுபடியும் அவன் விழிக்கையில் பொழுது நன்றாய் விடிந்து வெயிலும் வந்துவிடுகிறது. ஐயோ! எவ்வளவோ வேலைகளை இரவில் செய்துவிடலா மென்று இருந்தேனே என்று வாடுகிறான். சோம்பலின் தீங்கைக் கவனித்தீர்களா ?

93. ஒவ்வொரு சாமானையும் அதற்கென்று ஏற்பட்ட இடத்தில் வைக்க வேண்டும். இந்த ஒழுங்கு இல்லாததால் கண்ட இடத்தில் வைத்து விட்டு, பிறகு வைத்த இடம் மறந்து, அவசரத்துக்குச் சாமான் கிடைக்காமல் வீடு முற்றும் தேடி அல்லற்பட வேண்டியதாகிறது. எழுதும் பேனாவைக் காதின் பக்கம் சொருகிக் கொண்டு வீடு முற்றும் அதற்காகத் தேடி விட்டுப் பின்ட தலையைச் சொறிகையில் பேனாவைக் கண்டு வியப்புறும் புத்திசாலிகளும் உண்டு.

94. நல்ல பேச்சுக்கு நாலு அடையாளங்க ளுண்டு. 1-உண்மை, 2-அர்த்த புஷ்டி, 3-நயம், 4-சாதுர்யம். இதில் மூன்று குணங்களும் ஒருவன் சுலபத்தில் கற்றுக் கொள்ளலாம். அவை யத்தனை கஷ்டமில்லை. சாதுரியம் மட்டும் அநேக புஸ்தகங்களைப் படிப்பதாலும், பெரியோர்கள் பேசுவதைக் கேட்பதாலும் வரவேண்டும்.

95. டம்பனா யிருப்பவனை லக்ஷ்மி பரிஹாஸம் செய்கிறாள். பிராணனுள்ளவரையும் எவவிஷயத்திலும் மிதமாய் இருக்கவேண்டும். ஏராளமான கடன்களை வைத்துக் கொண்டு பணக்கார வாழ்வு வாழ்வதிலும் கடன் இல்லாக் கஞ்சி கால்வயிறு போதும்.

96. சோம்பல், காமம், மித மின்மை ஆகிய மூன்று துர்க்குணங்களால் கெட்டழிந்தவர்கள் அநேகர். சோம்பலால் ஜீவனார்த்தம் தேடாமல் வீட்டிற் கிடப்பது; காமத்தால் செல்வத்துக்கும் உலகத்துக்கும் கெடுதலைச் செய்வோனாதல். மித மின்மையால் எவ்வளவு வரவு வந்தும் வீணாகித் தரித்திரப்பட்டுத் தவிப்பது.

97. உழைக்கும் உழைப்பு நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படத் தக்கதா யிருக்கவேண்டும். தூர்த்தர்களின் மனோ திருப்திக்காக அவர்களுடன் கூடிக்கொண்டு ஊர் சுற்றி வெயிலிலும் மழையிலும் நனைவதில் என்ன பயன்? ஒவ்வொரு தினத்தின் காரியங்களையும் கிரமமான ரீதியில் அந்தந்த வேளையில் அததைச் செய்து முடிக்கவேண்டும். அவ்விதம் ஆகும் காரியத்தாற்றான் ஸந்துஷ்டியும் பயனும் உண்டாகிப் பரிமளிக்கும். வேளையில் உணவு உண்ணாமலும், ஓய்வு நாளில் உல்லாஸமா யிராமலும், பண்டிகை நாளில் ஒரு கலகம் சண்டையை வளர்த்துப் பாழாக்கியும் செய்யும் காரியங்களால் எவ்வித பலனு முண்டாகாது.

98. பாபங்களுக்கும் குற்றங்களுக்கும் முக்கிய காரணம் இரண்டே. 1-குடிவெறி, 2-அறியாமை.

99. கல்வி யென்பது நம்மிடம் இயற்கையாயுள்ள சகல சக்திகளையும் விர்த்தி செய்கிறது. ஏழைகள் தங்களின் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டிய காலத்தில் ஒரு ரூபாய் வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். இவர்கள் தங்கள் மக்களுக்குச் சத்துருக்களே யாவர். ஐந்தாவது வகுப்பு

வரையிலாவது வாசிக்க வைத்துப் பிறகே அவர்களை வேலைக்கு அனுப்ப வேண்டும். கல்வி செய்யும் உதவி இவ்வுலகில் வேறெவரும் செய்ய முடியாது.

100. வித்யா இன்பம் ஸன்மார்க்கத்தை வளர்ப்பதுபோல் வேறெதுவும் வளர்க்காது. எவ்வளவு பெரியோர்களின் ஸகவாசம் இருந்தாலும் அவைகளெல்லாம் கல்விக்குச் சமானமல்ல.

101. உன் வீட்டுப் புஸ்தகசாலை, உனது கல்விச்சாலை இவைகளுக்குச் செலவழிக்கும் பணம் எக்காலத்திலும் பிரயோஜனத்தைத் தரும் என்பதை உறுதியாக நம்பு. நல்ல சிநேகிதர்களைத் தேடி யடைவதுபோல் நல்ல புஸ்தகங்களை நாடிப் படிப்பது நன்று.

102. பெரியோர்களின் அருமையான பொக்கிஷமே புஸ்தக வடிவம் தாங்கி உன் முன்பு நிற்கிறது. நீ உண்ணுகிற அன்னத்தில் பாதியைக் குறைத்துக்கொண்டாவது நல்ல புஸ்தகங்களை வாங்கிப் படி. விசேஷமாய் மாதப் பத்திரிகைகளைக் கண்ணுக்குக் கண்ணாகப் பாவித்துச் கொள்.

103. மாதப் பத்திரிகைகளைப் பொன்போல் போற்றி 12-ஸஞ்சிகைகளையும் ஒருங்கு சேர்த்து வைத்துப் பயிண்டு செய்து பத்திரப்படுத்திக் கொள்ளுபவர்களே புத்திமான்கள். இரவல் கொடுத்தும், கிழிய விடுத்தும் சின்னபின்ன மாக்குவோர் கைக்கு வந்த தனத்தைக் கடலில் வீசி யெறிந்தோருக்கு ஒப்பாவர்.

104. பணத்தையும் பந்துக்களையும் விட, தனது சுய முயற்சியில் தைரியம், பலன், நம்பிக்கை ஆகிய இக்குணங்கள் இருப்பது மேன்மை.

105. அவசரம் அலுவலைக் கெடுப்பதுடன் ஆளையும் கெடுக்கிறது. இதென்ன கஷ்டம் என்று மனதில் எண்ணி முணுமுணுத்துக் கொண்டே ஓர் காரியத்தைச் செய்வது கெடுதலையே யுண்டாக்கும்.

106. உண்டாகக்கூடிய அபாயத்தை அலக்ஷியம் செய்வது தைரியமன்று. அதைத் தடுக்க எத்தனிப்பதுதான் தைரியமாகும்.

107. கஷ்டமும் துக்கமும் மாறுவேஷம் பூண்ட நண்பர்கள், உற்சாகமே நன்னடக்கையின் அறிகுறி. ஸதா உழைப்பதில் சிநதையுள்ளவன் எப்படியும் ஒரு காலத்தில் முன்னுக்கு வந்துவிடுவான். ஐயோ இன்னும் பொழுது போகவில்லையே என்று கொட்டாவி விடுபவன் ஒரு நாளும் கடைத்தேற மாட்டான். அவன் முகத்தில் விழிப்பதும் தோஷம்.

108. மனுஷ்யர்களுக்கு ஆசையாலே தான் கோபம் உண்டாகிறது. தன் வேலையை இழந்தவன் எஜமானனைக் கெடுக்க எத்தனிக்கிறான். அவன் தொழில் இனி ஈடேறாது என்கிறான். இவனை வேலைக்கு வைத்துக் கொள்ளுமுன் எஜமானனுடைய தொழில் சரவர நடந்துகொண்டிருக்க வில்லையா வென்பதைக் கவனித்துப் பார்ப்பதில்லை. தனக்கு வரும்படி தவறிப் போயிற்றே யென்ற வருத்தம் பாபகிருத்யத்தைச் செய்யத் தூண்டுகிறது. ஆதலின் ஒருவரை வேலைக்கு வைத்துக் கொள்ளுமுன்பு அவரால் ஸம்பவிக்கக்கூடிய கஷ்டங்களை யெண்ணிப் பார்க்க வேண்டும். எப்போதும் கூடியவரைத் தன் வேலைகளைத் தானே கவனிப்பது சிலாக்யம்.

109. துக்க மின்றி வாழ முடியாது. வெயில் இல்லாமல் நிழலில்லை. ஜெயமடைவோ மென்பது நிச்சய மில்லை. யானைக்கும் அடி சறுக்கு மன்றோ ?

110. தனக்கொன்றும் வேண்டியதில்லை யென்பதில் ஸந்தோஷம் அதிகம். சுகம் அநுபவிக்க ஆசை கொள்பவன் துக்க மடைகிறான்.

111. ஒரு மனிதனிடமுள்ள துர்க்குணத்தை பாராட்டாதே. நற்குணத்தை மட்டும் கிரகித்துக் கொள். இப்படியக் கற்றுக்கொண்டால் உத்தம குணம் தானே வந்து விடும்.

112. அற்ப காரிய மானாலும் அதைப் பிறருக்கென்று செய்தால் அதில் பெருமை யுண்டு. எவ்வளவு அற்பமான காரியமா யிருந்தாலும் தன் கண் பார்வையில் நடக்கிற விதம்போல், பிறர் பார்வையில் நடவாது.

113. எவனிடத்தில் சந்தேகம் கொள்ளுகிறாயோ அவனை வேலையிலமர்த்தாதே. வேலையில் வைத்துக்கொண்ட பிறகு ஒருவனிடம் அவநம்பிக்கை கொள்ளாதே, உன் யோசனைப்படியே நட. நீ கேட்கும் விஷயங்களெல்லாம் உண்மையென்று நம்பதே. நம்பிப் பிறரிடம் சொல்லாதே.

114. முக்கியமாய் தெய்வபக்தி, பதிபக்தி ஆகிய இரண்டும் நன்றாக உதகரித்துக் காட்டப்பட்டிருக்கும் நூல்களைப் படிக்கவேண்டும். தாய் தந்தையர் தத்தம் பாலகர் பாலிகைகளுக்கு நகைகளைப் போட்டு அழகு பார்க்குமுன் உத்தம புஸ்தகங்களை வாங்கிக் கொடுத்து நன்றாய்ப் படிக்கச் செய்தால் அவர்களுடைய மனம் பரிசுத்தமாகி நன்மார்க்கத்தையே பற்றும். ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி உத்தம புஸ்தகங்களுள் பொறுக்கி யெடுத்த நல்ல நூலாகும். வாசிக்கத் தெரிந்த ஒவ்வொரு சிறுவர் சிறுமியர் கையில் அப் புஸ்தகம் இருக்கவேண்டுமென்பது நமது கோரிக்கை.

115. நல்ல மனதில்லாத நன்றியற்ற பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எவ்வளவு ஆபரணங்கள் போட்டாலும் பிரகாசமுண்டாகாது. இன்னும் வேண்டுமென்றே குறைப்பட்டுச் சிடுசிடுப்பர். மனத்திருப்தி அபூர்வம்.

116. "ஒருவனுக்கு இயற்கையாயுள்ள விருப்பு வெறுப்புகள் இலகுவில் தொலைவதில்லை."—மகாத்மா

117. "மனித வர்க்கத்தைப் பல துண்டுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸ்வரூபம் கொடுக்கும்படி ஹிந்துமதம் சொல்லவில்லை. ஓர் அவிபக்த குடும்பத்தைப்போல் ஹிந்துக்கள் வாழவேண்டும்."—மகாத்மா

118. "தற்காலத்தில் பிரசுரிக்கப்படும் பல நாவல்களில் காணப்படும் ஆபாஸம் சொல்லிமுடியாது."—ஸி. எப். ஆண்ட்ரூஸ்.

119. "என்னுடைய ஆயுள்கால முழுவதும் என்னைப்பற்றித் தவறாகக் கூறப்பட்டிருப்பதில் எனக்கு அநுபவமுண்டு."—மகாத்மா.

120. "மாட்டுச் சாணியின் எருவிடப்பட்ட நிலத்தில் விளைந்த தானியத்தில் போஷணைச்சத்து அதிகமிருக்கிறது."—டாக்டர் மக்காரிஸன்.

121. "நெல்லை மில்லில் குத்துவதால் அரிசியிலுள்ள வைட்டமின் (Vitamin) என்னும் அரியசத்[illegible] போய்விடுகிறது."—ஸி. எப். ஆண்ட்ரூஸ்.

122. "தொழிலாளியா யிருப்பவன் முதலாவது செய்யவேண்டிய வேலை மற்றொரு தொழிலாளியை ஆதரிப்பதுதான்."—ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

123. "நான் சம்பந்தபட்டவரையில் பஹிரங்கமாகச் செய்யத் துணியாத ஒரு காரியத்தை ரகசியமாயும் செய்யமாட்டேன்."—மகாத்மா.

124. "குழந்தைகளோடு சேர்ந்திருப்பதென்றால் எனக்கு மிகவும் பிரியம். அவர்களோடு தமாஷாகப் பேசவும் விளையாடவும் முயல்வேன். இன்றைக்குக் கூட அந்த வழக்கம் உண்டு."—மகாத்மா.

125. "ஓர் உண்மை பார்த்த மாத்திரத்தில் நன்றாகத் தெரியக் கூடியதுதான். ஆனால் அதைச் சுற்றியுள்ள அறியாமையாகிய ஒட்டடையை அகற்றிய பிறகுதான் அது பிரகாஸமாகத் தெரிகின்றது."—மகாத்மா.

126. "கோபத்தினால் கேலி செய்கிறவர்கள் தங்களுடைய மனதைத் தூய்மைப் படுத்திக்கொண்டு அதிகமான மனோ வலிமையைப் பெறுவதற்குள்ள ஒரு பெரிய சாதனத்தை வீணாக இழக்கிறார்கள்."—மகாத்மா.

127. "ஒரு பெரிய வேலையைச் செய்து பார்த்தால்தான் நமது பலம் நமக்குத் தெரியும்."—மகாத்மா.

128. "விவாகமானவர்களைவிட விவாகமாகாதவர்கள் தான் அதிகமாகச் சாகிறார்கள் என்று தெரியவருகிறது."—'இங்கிலீஷ்மன்'

129. "ஏழைகளை ஏளனமாய் நினைக்காதீர்கள். ஜனங்களுக்குத் தொண்டு செய்வதே பகவானுக்குப் பூஜை செய்ததாகும்."—ஆர். வீரய்யன்.

130. "காதல் விஷயங்களில் பொறுப்பு நிச்சயமாக 40-வயதுள்ள மனிதனுடையதே யொழிய 13-வயதுள்ள பெண்ணினுடையதல்ல."—
2-6-26 பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு.

131. "எந்த மதத்தையும் உண்மையாக நம்புபவன் மற்றொரு மதப் பிரசாரகர் வலையில் சிக்கமாட்டான். சமூகத்தில் கெட்டுப்போனவர்கள் தான் மற்றவர் கூறும் ஆசைகளில் மயங்கி மதம் மாறுவார்கள்."
—அமிர்தபஜார் பத்திரிகை.

132. "நாம் இருவரும் பக்கத்து வீட்டினர்கள். ஒருவரை யொருவர் தள்ளிவிட முடியாது. வகுப்புச் சச்சரவுகள் தோன்றியிருப்பது அவமானம் கலவரங்கள் ஒரு மதத்தையும் மேன்மைப் படுத்தவில்லை."—
பண்டித மாளவியா.

133. "இருவரும் பரஸ்பர உணர்ச்சியை மதித்து நடந்தால் ஒற்றுமை ஏற்பட்டுவிடும்."—பண்டித மாளவியா.

134. "எல்லா மதத்தினரும் ஒரே கடவுளைத்தான் வழிபடுகிறார்கள். ஒரே மதத்தினருக்கு மட்டுந்தான் முத்தியுண்டென்பது புரட்டு"—
ஆதி நாதன்.

135. "உலகத்திலுள்ள மனிதர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாயினும், ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பாந்தவ்யத்தை யாரும் பிரிக்கமுடியாது."—ரவீந்திர நாதர்.

136. நாம் கதருக்காகக் கொடுக்கிற ஒவ்வொரு பைசாவும் ஏழைகளின் வயிற்றில் பாலே வார்ப்பது போலும். கதர் நல்லதாயிருந்தாலென்ன, கெட்டதாயிருந்தாலென்ன? விலை எப்படி யிருந்தால் தான் என்ன? கதர் உடுத்த ஆரம்பித்தவர்கள் அளவுக்கு மிஞ்சி நாஸுக்கரக உடை தரிப்பதில் பிரியங்கொள்ள மாட்டார்கள்.—மகாத்மா. (தொடர்ந்து வரும்.)

# விநோதக் கொத்து

**மாஜிஸ்திரேட் அதிகாரம் :—**

**மாஜிஸ்திரேட் :**—(சாக்ஷியைப் பார்த்து) நீ வைத்தியன் என்கிறாயே? உன் முகம் அப்படித் தெரியவில்லையே. பித்தம் தூக்கலாயும் வாதம் சற்று குறைவாயும் ஒருவனுக்கு இருக்குமாகில் அது என்ன அதிகாரத்தை காட்டும்? சொல் பார்ப்போம்.

**சாக்ஷி :**—அது மாஜிஸ்திரேட் அதிகாரத்தைக் காட்டுகிறது. அடக்குகிற படி யடக்கினால் அது தானாகப் படிந்துவிடும்.

***

**பிறகு பழகிப் போகும் :—**

**ஜோதிஷன் :**—நீர் 25-வயது வரையில் இப்படித் தான் கஷ்டப்படுவீர்.

**ராமன் :**—(வெகு ஆவலுடன்) "அதற்குப் பிறகு?"

**ஜோதிஷன் :**—பிறகு உமக்கு அந்தக் கஷ்டம் நன்றாகப் பழகிப் போய் ஸகஜமாய்ப் போய் விடும்.

***

**தட்புடல் இங்கிலீஷ் :—**

**ஆங்கிலப்பட்டதாரி :**—குட்மார்னிங் பண்டிட்; உமது கையில் இருப்பதென்ன?

**தமிழ்ப் பண்டிதர் :**—தொல்காப்பியம் ஐயா இது. அது நனி மிகப் பயனுள்ள நூல்.

**பட்டதாரி :**—வாட் 'நனிமிக?' நீர் சொல்வதென்ன?

**பண்டிதர் :**—'நனிமிக' எனில், மிகவும் சால; அன்றேல், சால மிகவும் எனப் பொருள் தரும்.

**பட்டதாரி :**—நீர் பேசுவதென்ன அராபியா? டமிள் டமிள்! டாம் டமிள். வாடீஸ் ஆல் தீஸ்? என்ன அது "நனி மிக?"

**பண்டிதர் :**—அதாவது மிகச் சால, மிகமிக. இது உரிச்சொல்.

பட்டதாரி :—உரி சொல், ஊறுகாய்ச் சொல் ஐ டோன்ட் கேர்—எனக்கு அவசியமில்லை. நான்ஸென்ஸ்!

பண்டிதர் :—அப்படிச் சொல்லாதீர். எத்துணையோ அரிய விஷயங்கள் அதனில் உள. ஏன்?—தொல்காப்பியர் இயற்றியதனுலென்க.

பட்டதாரி :—'என்க' எனுங்கோ, தத்தா பித்தா என்கிறீர். இந்த 'பூல் டமிள் ஒழியும் நாள்தான் நல்ல நாள். நோ யூஸ் அடால்! ஒரு பிரயோஜனமுமில்லை.

பண்டிதர் :—அவ்வண்ணம் பேசற்க. நன்னூல் விருத்தி யுரையும், நச்சினார்க்கினியர் உரையும் படித்துப் பாருங்கள்.

பட்டதாரி :—யார் அடு? நச்சென்ற கிழவன்? ஊ ஈஸ் ஹி? அவன் யார்?

பண்டிதர் :—உமக்கு வித்யாபட்டம் தந்தது எதற்காக? சுயபாஷையை இகழ்வதற்காகவா?

***

ஆண்மையும் பெண்மையும் :—

சுந்தரம் :—சில வேளைகளில் உன்னிடத்தில் ஆண்பிள்ளைத் தனம் இருக்கிறது. சில சமயங்களில் நீ பெண்பிள்ளை போல் நடக்கிறாய்? ஏன் அப்படி?

கோபாலன் :—என் முன்னோர்களில் சிலர் ஆண் பிள்ளைகள், சிலர் பெண்கள். ஆனதால் எனக்கு இருவகைக் குணங்களும் பொருந்தி யிருக்கின்றன போலும்.

***

ஒரு பதிவிரதை :—

போலீஸ் இன்ஸ்பெக்டர் :—அம்மா மங்காத்தா, திருடனைப் பிடித்து விட்டதில் நீ தைரியசாலிதான். ஆனால் உலக்கை கொண்டா அவனைப் புடைக்கிறது?

மங்காத்தா :—அந்த இழவு திருடனென்று எனக்குத் தெரிந்தால் அடித்திருக்க மாட்டேன். இரவில் வெகு நேரம் கழித்து வரும் என் புருஷப் பிணம்தானென்று எண்ணி, காலையில் உண்டான சண்டையின் கோபத்தைக் காண்பிப்பதற்காக அடித்து விட்டேன். மண்டை பிளந்த பிறகுதான் திருடனென்று தெரிந்தது.

புத்திசாலியான கணவன் :—

மனைவி :—நாதா! நாம் ஏறி யிருக்கிற இந்தக் கப்பல் ஜலத்தில் அமிழும் போலிருக்கிதே! என்ன செய்கிறது?

கணவன் :—அடி உனக்கென்ன? கப்பல் நமக்குச் சொந்தமல்ல, முழுகிப் போனால் சொந்தக்காரன் நஷ்ட மடைகிறான்.

100-க்கு 5-வட்டி :—

தந்தை :—பெண்ணே, உன் படிப்புக்கு இது வரை 5000 ரூபா செலவா யிருக்கையில், நீ 250 ரூபாய் வருஷ வரும்படியுள்ளவனை விவாகம் செய்ய இஷ்டப்படுவது சரியா?

மகள் :—தந்தாய், நீங்கள் செலவிட்ட 5000 ரூபாய்க்கு 100-க்கு 5-வட்டி யாகிறதல்லவா? அதைவிட அதிக வட்டி யார் கொடுக்கிறார்கள்?

நல்ல குடும்பம் :—

குரு :—சிஷ்யா, இந்தக் கோயிலைப் பார். இதிலுள்ள ஜனங்கள் ஏகோபித்து ஸ்வாமி தரிசனத்துக்கு இவ்விடம் வந்திருப்பதால் எல்லோரும் ஒரு குடும்பம்போல் இருக்கிறார்களல்லவா? இது மனதுக்கு வெகு ஸந்தோஷத்தைத் தருகிறது.

சிஷ்யன் :—குரு மகராஜ், தாங்கள் சொல்வது மிகவும் சரியான விஷயம். ஓர் குடும்பத்தில் எப்படி ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் போட்டுக்கொண் டிருக்கிறார்களோ, அப்படியே இங்கேயும் சண்டையும் கூச்சலும் கலகமுமா யிருக்கிறது; ஆனதால் இது ஒரு குடும்பந் தான்.

கக்ஷிக்காரனின் தந்திரம் :

கக்ஷிக்காரன் :—இந்த வியாஜ்யம் கட்டாயம் ஜெயிக்கும் என்கிறீர்களோ, அது நிச்சயம் தானா?

வக்கீல் :—அவசியம் ஜெயிக்கும், பீஸ் விஷயம் பேசிக் கொள்வோம்.

கக்ஷிக்காரன் :—நான் வழக்கு நடத்தவில்லை. தாங்கள் ஜெயிக்கும் என்றது என் பிரதிவாதியின் கேஸ். ஆனதால் போய் வருகிறேன்.

ஆதிகாலத்து மனிதன் :—

மாணாக்கன் :—ஐயா, மனிதன் ஆதி காலத்தில் நாகரீகமில்லாத மிருகம் போல் இருந்தானென்கிறார்களே; அது உண்மையா?

உபாத்யாயர் :—அப்பா, ஆதிகாலத்து மனிதனை எனக்குத் தெரியாது. தற்காலத்தில் ரயில்வண்டி புறப்பட்டு விட்டதற்கு 10-நிமிஷம் கழித்து தலைவிரி கோலமாய் பரக்கப் பரக்க ஸ்டேஷனுக்கு ஓடி வந்து, போய்க் கொண்டிருக்கிற வண்டியைப் பார்த்துப் பசபசவென்று விழித்துப் பெருமூச்சு விடுகிறவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்.

---

சந்தாதாருக்கு அறிவிப்பு.

எமது "ஆநந்த குண போதினி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 15உ தவறாமல் போஸ்ட் செய்யப்படும்.